உ

குருபாதம்.

# ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 41 ] துன்மதி ஆண்டு பங்குனித்திங்கள் 10-4-82 [ இதழ் 5

## தருமையாதீனத் திருமடத்தில்
### சைவ வைணவ ஆசாரியர்களின் சந்திப்பு



தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களும்
வானமாமலை மடம் ஸ்ரீமத் ஜீயர் சுவாமிகள் அவர்களும்

தருமையாதீனக் குருமுதல்வர்



ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

## ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

...[☆]...

நீயியற்ற ஓர்பொருளை
நிச்சயித்த நாயேனும்
போயியற்றல் செய்யப்
புரிகுவேன் — நீயியற்றல்
ஆக்கா தனுவும்
அசையுமோ அவ்விகற்பந்
தாக்காத சொக்கநாதா.

—சொக்கநாத வெண்பா. 86.

ஆசிரியர் :-

வித்துவான்
**இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள்**

துணையாசிரியர் :-

மகாவித்துவான்
**சி அருணைவடிவேல் முதலியார்**

உ

குருபாதம்

# "ஞானசம்பந்தம்"

**தருமையாதீனத் திங்கள் இதழ்**

மலர் 41 | 10-4-82 | இதழ் 5

## உட்பொருள்



ஆண்டுச் சந்தா உள்நாடு ரூ. 10
ஆண்டுச் சந்தா சிலோன் ரூ. 12
ஆண்டுச்சந்தாவெளிநாடு ரூ. 23

ஆயுள் சந்தா உள்நாடு ரூ. 100
ஆயுள் சந்தா வெளிநாடு ரூ. 125

உ

குருபாதம்.

# ஞானசம்பந்தம்

மலர் 41 | துன்மதி - பங்குனி - 10—4—82 | இதழ் 5

திருச்சிற்றம்பலம்.

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. — சம்பந்தர்

திருச்சிற்றம்பலம்.

# இந்துமதத்திற்கு ஈழத்தில் பெருவிழா!

**பண்பாட்டுப்பாலம் :**

'சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம்' 'சேதுவை மேடுறுத்தி வீதி அமைப்போம்' என்று அறுபது ஆண்டுகளுக்கு முன்னரே அமரகவி பாரதி பாடிவைத்தார். நாம் இன்னும் அந்த முயற்சிகளில் ஈடுபடவில்லை. ஆனல், இலங்கை இன்று இந்தியாவிற்குக் கலாசார பண்பாட்டு வளர்ச்சி நோக்கில் ஒரு பாலம் அமைக்கிறது. இந்திய மக்கள் - இந்து மதம் பிறந்த நாட்டில் - எண்ணிப்பார்க்கக்கூட இயலாத பெருஞ்சிறப்பாய் இலங்கை அரசு நடத்தவிருக்கும் 'அகில உலக இந்து மாநாடு' பலநூறு ஆண்டு உறவை ஈழத்தோடு மேலும் நெருக்கமுடைய தாக்குகின்றது. உலக இந்துக்கள் - தங்கள் பாரம்பரியம் மிக்க - வேதவழிப்பட்ட - வைதிகநெறியாகிய இந்துமதத்தை— அதன் வழிப்பட்ட பண்பாட்டுச் சமயங்களை - அவற்றின் கோட்பாடுகளை ஒருங்குகூடி இலங்கையிலே ஆராயவிருப்பது நமக்கெல்லாம் பெருமகிழ்ச்சியினைத் தருவதாக அமைகிறது.

**ஈழத்தின் ஏற்றம் :**

இலங்கை அரசு 'இந்து சமய, இந்து கலாசார - தமிழ் அலுவல்கள் - பிரதேச அபிவிருத்தி' என்ற துறை ஒன்றை நிறுவி, அதற்கு ஒருதமிழரையே அமைச்சராக அமைத்துள்ளது. இத்துறைக்குப் பொறுப்பேற்றுள்ள அமைச்சர் மாண்புமிகு செ. இராசதுரை அவர்களின் அரிய முயற்சியால், இலங்கை அரசின் முழுமையான ஒத்துழைப்போடும், இந்தியத் தமிழ்நாடு அரசின் உதவியோடும், அகில உலக இந்து மாநாடு ஒன்று எதிர்வரும் ஏப்ரல் திங்கள் 21 ஆம் நாள் தொடங்கி ஐந்துநாட்களுக்குத் தலைநகர் கொழும்பில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. இம்மாநாட்டை பௌத்த மதத்தைத் தாய்ச் சமயமாகக் கொண்ட இலங்கையின் ஜனாதிபதி மாண்புமிகு. ஜெயவர்த்தனே தொடங்கிவைக்க இருக்கிறார். உலகின் பலநாடுகளிலிருந்தும் பலநூறு இந்து மதப் பேரறிஞர்கள் ஒன்றுகூடி இந்து மதத்தின் பெருமைகளை ஆராயஉள்ளனர். மாநாட்டைஒட்டிக் கண்காட்சி மற்றும் சுற்றுலாக்கள் ஏற்பாடாகியுள்ளன என்ற செய்திகள் இந்துமக்களுக்கு - குறிப்பாகத் தமிழ்நாட்டுமக்களுக்குப் பெரு மகிழ்ச்சியை நல்கியுள்ளன. இதனால் ஈழத்தின் ஏற்றம் ஒருபடி உயர்கிறது.

**ஜனநாயகப்பண்பு :**

இலங்கை நமது அண்டைநாடு. நமது பாரத நாட்டுக்குப் பின்னரே விடுதலைபெற்றது. பண்பாட்டுவகையில் நமது சேய் நாடு என்றுகூடச்சொல்லலாம். பௌத்தம் இந்நாட்டின் பெரும் பான்மை மக்களின் சமயமாகும். அரசு பௌத்த மதச்சார் புடையது. என்றாலும் இந்நாட்டில் இந்துக்களும், கிறித்தவர் களும், இஸ்லாமியர்களும் நிறைவாக வாழ்ந்து வருகிறார்கள். இவர்கள் கோயில்களில், முறையான வழிபாடுகள் நிகழ்த்தவும் மற்ற சமயங்களைத் தூற்றாது தத்தம் சமய வளர்ச்சிக்கென ஆக்க பூர்வமான முயற்சிகளில் ஈடுபடவும் இலங்கை அரசு உதவுகின்றது. எம்மதத்தவராயினும் அவரவர் தமக்கு விருப் பமான மதங்களில் மதாசாரங்களைப் போற்றிக்கொண்டு அமைதியாக வாழ இலங்கை அரசு உத்தரவாதம் வழங்கி யுள்ளது நமக்கு மனநிறைவினைத் தருவதாக உள்ளது.

**இலங்கை வழிகாட்டுகிறது :**

இலங்கையில் நாத்திகவாதங்களுக்கும் பிரசாரங்களுக்கும் இடமே இல்லை. பள்ளிகளிலும் கல்லூரிகளிலும், பல்கலைக்

கழகங்களிலும் சமய பாடங்கள் – கட்டாய பாடங்களாகப் பயிற்றுவிக்கப்படுகின்றன. மொழி, விஞ்ஞானம், கணிதம் என்பனபோல் முறையான சமய பாடங்கள் வகுக்கப்பட்டு போதிக்கப்படுகின்றன. இவற்றில் தேர்வுகள் உண்டு. பிற பாடங்கள்போல் இவற்றில் உரிய மதிப்பெண்பெற்ருல்மட்டுமே தேர்ச்சி என்ற நிலே அங்கே உள்ளது. ஒரேபள்ளியில் பௌத்தம். இந்துமதம், கிறித்துவம், இஸ்லாம் மதத்துப் பிள்ளேகள் படிப்பார்களாளுல் அவரவர்களுக்கும் தனித்தனியே பாடப் புத்தகங்களும் – போதனேயும் – தேர்வும் – மதிப்பீடும் நடைமுறையில் உள்ளன. சமயப் பற்றும் சமய ஆசாரமும் உடையவர்களாய்க் குழந்தைகளும், இளேஞர்களும், ஆராய்ச்சி மாணுக்கர்களும் வளர இம்முறை பெரிதும் உதவும் என்பது ஒருதலே. இவ்வகையில் இலங்கை அரசு நமது பாராட்டுதலுக்கு உரியதாகிறது. மதச்சார்பற்ற ஒரு அரசு செய்யவேண்டிய சமரசப்பணியை மதச்சார்புள்ள இலங்கை அரசு செய்து உலகிற்கே வழிகாட்டுகிறது.

**ஈழத்தைப் பார்ப்போம் :**

அரசுச் சார்புடைய ‘ இலங்கை வாஞெலி ’ தமிழ் மக்களின் அபிமானத்திற்கு உரியது. பொதுவாக ‘ அருள்வாக்கு ’ என்ற பெயரில் ஏதேனும் ஒன்றைச் சம்பிரதாயமாக ஒலிபரப்பும் நிலே அதில் இல்லே. இந்து மக்களுக்காக, பௌத்தச் சார்புடைய அரசின் கட்டுப்பாட்டில் திகழும் இலங்கை வாஞெலி ‘ சைவ நற்சிந்தனே, கிறித்தவநற்சிந்தனே, இஸ்லாமியநற்சிந்தனே’ என்ற நிகழ்ச்சிகளே நாள்தோறும் ஒலிப்பரப்புகிறது. மாலேயில் ‘ஞான விளக்கு ’ என்ற சமய நுட்ப விளக்கவுரைகள் ஒலிபரப்பாகின்றன. இந்துக்கோயில் குடமுழுக்குவிழாக்கள். சமயவிழாக்கள் போன்றவற்றை நேரடியாக நீண்டநேரத்திற்கு இலங்கை வாஞெலிமுறையாக ஒலிபரப்பிவருகிறது. இலங்கை நாளேடுகளும்,வார ஏடுகளும் சமயவளர்ச்சிக்கென உரியஇடம் ஒதுக்குகின்றன. இலங்கை “ கோபுரம் ” என்ற அழகிய இந்துமதத் திங்கள் இதழ் ஒன்றையும் வெளியிட்டுவருகிறது. இந்துமதம் பிறந்த நமது நாட்டில் அதற்குக் கிடைக்காத சிறப்பு இலங்கையில் வழங்கப்படுவது நமது நெஞ்சில் மகிழ்வூட்டுகின்றது.

**ஆறுதல் பெறுவோம் :**

நமது இந்தியப் பெருநாடு விடுதலே பெற்றபின் சமயச் சார்பற்ற நாடு என்று அறிவிக்கப் பெற்றது. அரசு எந்த ஒரு மத வளர்ச்சிக்கும் இங்கே பாடுபடுவதும் இல்லே. உதவுவதும் இல்லே. சிறுபான்மையினர் என்ற வாய்ப்பில் கிறித்தவர்களும்

இஸ்லாமியர்களும் தம் உரிமையோடு தத்தம் நெறிகளை நன்கு வளர்க்க வாய்ப்பளிக்கப் பெற்றுள்ளனர். ஆனால், தொன்மை மிக்கதும், பெரும்பான்மை மக்களால் பின்பற்றப்படுவதுமான நமது இந்துமத வளர்ச்சிக்கோ, இந்துமக்களின் நல உணர்ச்சிகளுக்கோ இங்கே அரசின் பரிவு சிறிதும் இல்லை என்பது அனைவரும் அறிந்ததே. குறிப்பாகத் தமிழ்நாட்டில் இந்துமத நடவடிக்கைகளைப் பாதுகாக்க ஒரு இலாகாவே உண்டு. இந்துமத சம்பிரதாயங்களையும், இந்துக்கடவுளர்களையும், இந்து மததலைவர்களையும் அவமதித்து இழித்துரைப்பார்பற்றி இங்கே கேள்விமுறை இல்லை. நமது வானொலியிலேயோ, செய்தி ஏடுகளிலேயோ நமது சமயத்திற்கு உரிய இடம் வழங்கப்படுவதே இல்லை. இந்த நிலையில் அண்டைநாடான இலங்கையில் பௌத்த மதத்தை வளர்த்துப் பாதுகாப்பதோடு இந்துமதத்திற்குத் தரப்பெற்றுவரும் சிறப்புக்கள் ஆறுதல் தருகிறது.

**சமநிலை வாழ்வுறுவோம் :**

இந்திய நாட்டில், தமிழகத்தில் நம் மக்களிடம் பண்பாட்டு நெறி முறைகளை வளர்க்கச் சமயமே சிறந்த கருவியாக உதவ இயலும். அரசு, சமயச் சார்பற்றநிலை என்ற போர்வையை உதறிவிட்டு, பெரும்பான்மை மக்களின் சமய வளர்ச்சிக்கு உரியவாறு உதவ முன்வரவேண்டும். அல்லது ஜனநாயக ரீதியில் எல்லாச் சமயங்களுக்கும் சம அளவில் ஆதரவு தந்து வளர்க்கவேண்டும், 'பாதுகாக்கவேண்டும். அண்டைநாடான இலங்கை இவ்வகையில் நமக்கு வழிகாட்டுகின்றது. தடையற்ற சூழ்நிலையில் இந்து மதம் வளரவும், சமயக் காழ்ப்பின்றி பிறமதத்தார் வாழவும் இந்திய அரசும், தமிழ்நாடு அரசும் இலங்கை காட்டும் வழியில் ஆவனசெய்வார்கள் என எதிர்பார்ப்போம்.

**வாழ்த்து :**

இலங்கையில் நடைபெறும் அகில உலக இந்துமத மாநாடு இனிதே நிகழவும், மாநாட்டை நடத்த முன்வந்ததோடு தொடங்கிவைத்துச் சிறப்புரையாற்றும் இலங்கை ஜனதிபதி மாண்புமிகு ஜெயவர்த்தனே அவர்களும், அவர் ஆணைக்கேற்ப சிறந்த முறையில் இயக்கிவரும் அமைச்சர் மாண்புமிகு செ. இராஜதுரை அவர்களும் நலம் பல பெற்றுத் திகழவும் மாநாட்டில் பங்குகொள்ளும் பல நாட்டுச் சமய தத்துவப் பேரறிஞர்களும் நலமெலாம் பெற்று மகிழவும், மாநாட்டு மலர் நறுமணங்கமழ்ந்து மக்களிடையே சமயதத்துவ விளக்கங் காணவும், இறையருளை வாழ்த்துகின்றோம்.

உ

குருபாதம்.

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்
26 ஆவது குருமகாசந்நிதானம்

**ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**

**ஸ்ரீ வானமாமலை திருமடம் 28 ஆவது ஆசாரியர்**
**ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி**
**ஸ்ரீ சடகோப இராமானுஜ ஜீயர் சுவாமிகள்**
**தருமையாதீனத்திற்கு எழுந்தருளியபோது**

வழங்கியருளிய

# ஆசியுரை.

5—4—1982

" மாலாகி நான் முகனாய் மாபூதமாய்
மருக்கமாய் அருக்கமாய் மகிழ்வுமாகிப்
பாலாகி எண்திசைக்கும் எல்லையாகிப்
பரப்பாகிப் பரலோகம் தானேயாகிப்
பூலோக புவலோக சுவலோக மாய்ப்
பூதங்களாய்ப் புராணன் தானேயாகி
ஏலாதன வெல்லாம் ஏல்விப் பானாய்
எழுஞ்சுடராய் எம்மடிகள் நின்றவாறே "

**சைவமும் வைணவமும் :**

சைவமும் வைணவமும் இந்து சமயத்தின் இருகண்கள் போன்றவை. எல்லாச் சமயங்களும் மக்களுக்கு நல்வழி புகட்டி நன்மை தரவே தோன்றின. ஆனால் அச்சமயங்களைப் பின்பற்றுவோர்கள் பிற்காலத்தில் செய்த குறைகளினால் அச்சமயங்களுக்குள் குறைகளும் பிளவுகளும் ஏற்படலாயின. சமயப் பொதுமையும் சமய உணர்வும் மக்கள் மத்தியில் பரவவும் அவற்றின்வழி மக்கள் அனைவரும் வேறுபாடு நீங்கி ஒற்றுமையுடன் வாழவும் சமயம் சார்ந்தவர்கள் ஒன்றுபடுதல் இன்றியமையாததாகும். அவ்வகையில் இன்று ஸ்ரீவானமாமலை

திருமடத்தின்கண் 28 ஆவது ஆசாரியராய் வீற்றிருந்து தொண்டு புரிந்துவரும் ஸ்ரீமத் ஜீயர் அவர்கள் இவ்வாதீனத்திற்கு வந்திருப் பதும் அவர்களை வரவேற்றுமகிழ்வதும் எடுத்துக்காட்டுக்களாய் அமைந்துள்ளன.

## ஆதீன அருள்வரலாறு :

தருமையாதீனம் இற்றைக்கு நானூறு ஆண்டுகட்குமுன்பு தோன்றிச் சைவசமயமும் தமிழும் ஒருங்கு தழைக்கத் தொண் டாற்றி வருவது. ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகளால் தோற்றுவிக்கப்பெற்றது. மதுரை ஸ்ரீ சொக்க நாதப்பெருமானைக் கண்ணுக்கு இனிய பொருளாகக் கைவரப் பெற்ற குருமூர்த்திகளின்வழி அப்பெருமானை நாளும் பூஜித்து வரும் நியமம் உடையது. திருக்கயிலாய பரம்பரையின் வழி வந்து இல்லற ஞானியராய் விளங்கிய திருவாரூர் கமலை ஞானப் பிரகாசரைத் தம் ஞானாசிரியராகக்கொண்ட குருமுதல்வரின் வழி சைவப் பயிர் தழைக்க ஒல்லும் வகை சமயப்பணி செய்து வருவது. இங்கே பதினாறு ஒடுக்கங்கள் அமைந்திருத்தலுக் கேற்பப் பிராசாதயோக அனுபூதிமான்கள் பலரும் தோன்றி வாழ்ந்து வழிகாட்டிய சிறப்புடையது.

## ஸ்ரீ வானமாமலை வரலாறு :

ஸ்ரீ வானமாமலை திருமடம் வைணவத் திருமடங்களில் தென்கலைத் திருமடமாக விளங்குவது. உரோமச முனிவரின் தவத்திற்கிரங்கித் திருமால் வானம் என்ற வைகுந்தத்திலிருந்து கீழிறங்கி மலைக்கண் தோற்றமளித்தபடியால் வானம்ஆம்மலை எனும் காரணப்பெயர் பெற்றது. ஆதிசேஷன் அங்கே இறை வனைக் குறித்து வழுவிலா அடிமைகள் செய்த தலமாதலின் “ நாகணைச்சேரி ” என்றும் சேற்றுத் தாமரைக்குளத்தில் மூழ்கி யிருந்த திருமாலின் திருமேனியை வெளிக்கொணரும்பொருட்டு அவ்வேரியை நான்குகூருக வெட்டியதால் “ நான்குனேரி ” என்றும் அழைக்கப்படுகிறது. இத்தகைய சிறப்புக்கள் பல பெற்ற அவ்வூரின் கண் ஸ்ரீ ரங்காசாரியாரின் இரண்டாவது புதல்வராகத் தோன்றியவர் அழகியவரதர் ஆவார். இவருக்குப் பன்னிரண்டுவயது நிரம்பிய நிலையில் திருவாய்மொழிப்பிள்ளை என்னும் அருளாளர் இவரை ஆழ்வார்நகரிலுள்ள தம்சீடராகிய மணவாளமாமுனிகள் என்பாரிடம் சீடராக ஒப்படைத்தார் அவ்வாசிரியரை விட்டகலாது தொண்டுகள் புரிந்துவந்த அழகியவரதர் ஒருமுறை மணவாள மாமுனிகளின் இசைவு பெற்று வானமாமலைத் தெய்வநாயகனைத் தரிசிக்கச்சென்றார்

வானமாமலைப் பிரானிடம் இல்லற வாழ்க்கையின் மீதுள்ள வெறுப்பையும் துறவுநோக்கையும் வெளிப்படுத்தினர். வான மாமலை தெய்வநாயகனும் அழகியவரதருக்குத் துவராடையும் முக்கோலும் வழங்கித் துறவுநெறிப்படுத்தி, " ஸ்ரீ வானமாமலை ராமாநுஜ ஜீயர் " என்ற திருநாமமும் சூட்டியருளினர்.

## திருமடம் :

தம் திருக்கோயிலின் அருகிலேயே விடுதி ஒன்றைத் திருமடமாக்கியும் வைத்தார். இத்திருமடத்தின் கண் இருந்து தெய்வநாயகனின் திருவடித் தொண்டில் ஈடுபட்டிருந்தாலும் ஆசாரியரான மணவாள மாமுனிகளை விட்டுப்பிரிந்து வாழ்வது ஜீயருக்குப் பெருந்துயர் விளைவித்தது அதனல் மாமுனிகள் இருக்கும் ஆழ்வார் நகரிக்குப் புறப்பட்டுச் சென்ருர், அங்கே பல்லாண்டுகள் ஞானசிரியருடன் இருந்தும் தலங்கள் பல வற்றை உடனிருந்து யாத்திரை செய்தும் வந்தார். அதன் பின்னர் தெய்வநாயகனின் திருவருட்குறிப்பறிந்தஞானசிரியரின் அருளாணை ஏற்றுத் திருமடத்தின்கண் வந்து தங்கினர் என்பது வரலாறு. இங்கே நம் ஆதீன நிகழ்ச்சி ஒன்றையும் ஒப்பிட்டுக் காணலாம். ஆதீனக் குருமுதல்வரவர்களும் பல்லாண்டுகள் இல்லற ஞானியாகிய ஸ்ரீ கமலை ஞானப்பிரகாசரைப் பிரிய மனமின்றித் தொண்டுகள் பல செய்து வந்தார் என்பதும் பின்னே ஞானசிரியரின் அருளாணை ஏற்றே தருமபுர ஆதீனத்தை நிறுவி அடியார்களுக்கு அருளுபதேசங்கள் வழங்கியருளி னர் என்பதும் ஒப்பு நோக்கி மகிழத்தக்கனவாகும்.

## தந்தைச்சமயம் தாய்ச்சமயம் :

இங்ஙனம் அருளாளர்களால் தோற்றுவிக்கப் பெற்ற திரு மடங்கள் சமயப்பயிர் தழைக்க ஒல்லும் வகை அறப்பணி புரிந்து வருகின்றன. இத்தருணத்தில் இங்கே உள்ள சைவ வைணவ அன்பர்கள் சில கருத்துக்களைச் சிந்தித்தல் நலம் பயக்கும். சிவபெருமான் முழுமுதற்கடவுள் என்பதும் திருமால் புருடசக்தியாய் விளங்குபவர் என்பதும் முன்னோர்கள் கண்ட உண்மையாகும். சிவனை ஆண்மை நிலையிலும் திருமாலைப் பெண்மை நிலையிலும் வைத்து வழிபடுவது மரபாக இருந்து வருகிறது. பெண்மை நிலைக்கேற்ப திருமால் அலங்காரப்பிரியர்; ஆண்மை நிலைக்கேற்ப சிவபெருமான் அபிடேகப் பிரியர். திருமால் பள்ளி கொண்டிருக்கும் பொழுதும் பெண்மை நிலை யில் வலப்பக்கம் கீழ் வைத்தும் இடப்பக்கம் மேல் வைத்தும்

இருப்பதனைக் காணலாம். அவதாரத்தில் மோகினி அவதாரம் எடுத்ததும் இக்கருத்திற்கு ஆதாரமாக விளங்குவது ஆகும். இக்கருத்தினுல்தான் அப்பரடிகளும்,

" அரியலால் தேவியில்லை ஐயன் ஐயாறனுர்க்கே "

என்றும்

" நாரணனை இடப்பாகத்து அமைத்தார் போலும் "

என்றும் அருளிச்செய்கின்ருர். அபிராமி பட்டரும் உமையம்மையைத் திருமாலின் தங்கை என வைத்து, " செங்கண் மால் திருத்தங்கச்சியே " என்று மொழிகின்ருர். அதனுல் தான் சிவபெருமான் திருக்கோயிலில் திருமாலின் திருவுருவம் இடம் பெற்றுள்ளது. சங்கரநாராயணர் திருக்கோயில் போன்ற தலங்கள் இக்கருத்திற்கு அரண் சேர்ப்பனவாகும். எனவே சிவவழிபாட்டில் திருமால் வழிபாடும் ஓர் அங்கமாக இருந்துவருகிது.

## தத்துவங்கள் :

சைவ சமயிகள் கூறும் 36 தத்துவங்களில் முதற்கண் உள்ள24 தத்துவங்கள் வரையிலும் சைவ வைணவம் இணைந்தேகருத்து வழங்குதலைக் காணலாம். அவ்விருபத்து நான்கு தத்துவங்களும் இவை எனச்சிந்தித்தல் தேவையானது. ஞானம் தோன்றுதற்கு நிலையாகியமெய், வாய், கண், மூக்கு, செவி, எனும் பொறிகளாகிய அறிவுக் கருவிகள் ஐந்து; இவ்வைந்தின் வழி தோன்றுவதாகிய ஊறு, சுவை, ஒளி' நாற்றம், ஓசை, எனும் புலன்களாகிய தன்மாத்திரைகள் ஐந்து; தன்மாத்திரைகளின் வெளிப்பாடாகிய மண், நீர், தீ. வளி' ஆகாயம் எனும் பூதங்கள் ஐந்து, அறிவுக் கருவிகளைப் போன்று உடலில் உள்ள தொழிற்கருவிகளாகிய வாக்கு, பாதம், பாணி எருவாய், கருவாய் எனும் ஐந்து. இவ்விருபதும் புறக் கருவிகள் எனப்படுவன. இவ்விருபதோடு மனம், புத்தி, சித்தம், அகங்காரம், எனும் உட்கருவிகளாம் அந்தக்கரணங்கள் நான்கையும் கூட்டத் தத்துவங்கள் 24 ஆகும். இவ்விருபத்து நான்கும் போக காண்டம் என்ற பிரிவுடையது. துய்க்கும் நிலைகளையுடையது இப்போக காண்டம், வித்தியாதத்துவங்கள் என அடுத்துக் கூறப்பெறும் போக்கிய காண்டம் துய்க்கும் நிலைக்கு ஆயத்தப்படுத்தும் சிறப்புடையதாகும். அடுத்துள்ள சிவ தத்துவங்கள் எனக் கூறப்பெறும் பிரேரக காண்டம் ஆணையிடும் உயர்வுடையது. இக்கருத்துக்களைச் சைவர்கள் சிந்தித்து

விளக்கியுள்ளனர். எனவே சைவ வைணவம் ஒரு குறிப்பிட்ட எல்லை வரையிலும் இணைந்தே செல்லும் சிறப்புடையன. சைவம், வைணவக் கருத்துக்களையும் உள்ளடக்கிய உயர்வு உடையதுஎன்பது உணரத்தக்கது. இங்கேவருகைதந்திருக்கும் ஸ்ரீமத் ஜீயர் அவர்கள் 'திரிதண்டம்' என்றழைக்கப்பெறும் ஒன்றைக் கையில் கொண்டுள்ளார்கள். பரந்தாமன், சித்து அசித்து என்ற மூன்றும் திரிதண்டத்திற்கு விளக்கங்கள் எனக் கூறுகிறார்கள். சைவசமயம் கூறும் பதி, பசு, பாசம் என்ற மூன்றும் இவற்றுடன் ஒன்றுபட்டு இருத்தலைச் சிந்தித்தல் தக்கதாகும்.

## இந்து மதத்தின் இரு கண்கள் :

எனவே இதுவரை சிந்தித்த பல கருத்துக்களையும் இணைத்துப் பார்க்கும் பொழுது இந்துமதத்தின் இருகண்களாக விளங்கும் சைவமும் வைணவமும் தத்துவங்கள் பலவற்றில் ஒன்றுபட்ட நிலையுடையன என்பதும் அவ்வச் சமயத்தைச் சார்ந்த அன்பர்கள் அவரவர்கள் வழிநின்றே இறையருள் பெறலாம் என்பதும் உணரத்தக்கன. பள்ளிகள் பல இருப்பினும் அவை அனைத்தும் அறிவு வளர்க்கவே பயன்படுகின்றன என்பது போலத் திருமடங்கள் பல இருப்பினும் அவை அனைத்தும் அவ்வத் தத்துவங்களின் வழி நின்றே அறப்பணிசெய்துவருகின்றன என்று கொண்டு சமயப் பொதுமையுணர்வுடன் வாழ்ந்து இறையருள் பெறுவார்களாக!

## இனிதே நிகழ்க :

இதற்கு முன்பு ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களின் அருளாட்சிக் காலத்தில் இவர்களுக்கு முன்பிருந்த ஸ்ரீமத் ஜீயர் அவர்கள் தருமையாதீனத்திற்கு விஜயம் செய்திருக்கிறார்கள். இப்பொழுதும் அதே போன்று இவர்கள் இங்கு வந்திருப்பதும் அவர்களை வரவேற்பதும் மகிழ்ச்சிக்குரியன. 108 வைணவத் திருப்பதிகளைத்தரிசிக்கும் நோக்குடனும் பக்தர்களையும், சிஷ்யர்களையும் ஊக்கப்படுத்தும் நோக்கத்துடனும் தலயாத்திரை மேற்கொண்டு வரும் ஜீயர் சுவாமிகள் வடநாடு சென்று பத்ரிநாதரைத் தரிசனம்செய்யும் பெரும்பணியை மேற்கொண்டுள்ளார்கள். அவர்களின் தலயாத்திரை இனிதே நிகழவும் பக்தர்கள் அனைவரும் நலம்பலபெற்று நீடுவாழவும் செந்தமிழ்ச்சொக்கன் திருவருளைச்சிந்திக்கின்றோம்.

---

உ

குருபாதம்.

தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம்

**ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரியசுவாமிகள்**

வழங்கியருளிய

# புத்தாண்டு ஆசிச்செய்தி

பஞ்சாங்கம் என்பது திதி, வாரம், நட்சத்திரம், யோகம், கரணம் எனும் ஐந்து அங்கங்களைக் குறிக்கிறது. சூரியன், சந்திரன், பூமி இம்மூன்றின் தொடர்பினால் உண்டாகும் கிரகணம் பற்றியும் மற்றும் இவை போன்ற வானசாத்திரக் கருத்துக் களையும் முன்னோர்கள் மிகவும் நுட்பமாகக் கணக்கிட்டு வைத் துள்ளனர். இன்றும் பஞ்சாங்கத்தில் பின்னே வரும் சந்திர கிரகணம், சூரியகிரகணம் பற்றிக் குறிப்பிட்டநாள், குறிப்பிட்ட மணி, குறிப்பிட்ட நிமிடம் எனக்கணக்கிட்டுத் தருவதைக்கணக் கிட்டபடியே அறியமுடிகிறது. இது முன்னோர்கள் அறிந்திருந்த வான சாத்திரத்தின் சிறப்பைக் காட்டுகின்றது. எனவே பஞ்சாங்கம் பார்ப்பது என்பதுகுறையுடையது என்றுகருதாமல் அது வானசாத்திரத்தை அறியப் பயன்படும் நூல் என்று கருதுதல் வேண்டும்.

வானத்தில் நிகழும் கிரக மாறுபாடுகளினால் இன்ப துன்பங்கள் ஏற்படுகின்றன என்பது அறிவுபூர்வமான உண்மை. ஆனாலும் அக்கிரகங்களின் மாறுபாடுகளும் பூமியில் வாழும் மக்களின் நல்ல செயல் தீய செயல்களால்தான் விளைகின்றன என்று திருமந்திரம் கூறுகிறது.

" இன்பமும் துன்பமும் நாட்டாரிடத்துள்ள
நன்செயல் புன்செய லாலந்த நாட்டிற்காம்
என்ப இறைநாடி நாடோறும் நாட்டினின்
மன்பதை செப்பஞ் செயின்வையம் வாழுமே "

என்பது திருமந்திரப் பாடல். இக்கருத்திலேயே "தீதும் நன்றும் பிறர்தரவாரா" எனப் புறநானூறும் "பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக்கல்" என்று

திருக்குறளும் கருத்து வழங்குவதைக் காணலாம். ஆதலின் மக்களுக்கு வரும் இன்ப துன்பங்களுக்கு மக்களின் எண்ணங் களும் பேச்சுக்களும் செயல்களுமே காரணமாகின்றன என்று உணர்ந்து நல்ல முறையில் நடத்தல் இன்றியமையாதது.

இவ்வாண்டின் பலன்களை,

" துந்துபியின் மிக்கசுக சோபன முண்டாம் புவியில்
சந்ததமும் வாசமலர்த் தாமரைமேல் – இந்திரையும்
செல்வமிகக் கொடுப்பாள் செந்நெல் விளைவுண்டாமே
நல்ல மழையுண்டு நவில் "

எனும் இவ்வெண்பாவினுல் அறியலாம். இவ்வாண்டு நல்ல மழை பெய்து உணவுப் பற்ருக்குறை நீங்கும். செல்வ வளம் கொழிக்கும் என்று தெரிகிறது. இவ்வளங்களோடு, துன்மதி ஆண்டில் நடைபெற்ற மதமாற்றங்கள், பூசல்கள் போன்றவை இன்றி மக்கள் அனைவரும் துந்துபிஆண்டில் நாளும்நல்லனவே செய்து நல்லனவே பெற்று ஆண்டின் பெயருக்கு ஏற்ப மங்கல முழவு இயம்ப நல்லவற்றிற் கெல்லாம் மூலமாகவுள்ள இறைவனைப் போற்றி இன்புற்று வாழ்வார்களாக.

---

# குடமுழ நந்தீசன்

நக்கீரன் வழியடிமை,

**புலவர் திரு. பி. மா. சோமசுந்தரம்.**

( மலர் 41, இதழ் 4, பக்கம் 195 இன் தொடர்ச்சி )

## 7. சுந்தரன்

மணிவாசகர் பிற்காலத்தவர் என்பாரில் ஒருசாரார் 'குடமுழ நந்தீசனை வாசகனுக்கொண்டார்' என்பது மணிவாசகர்பெருமானைக் குறிக்குமென்பீரேல், 'சுந்தரனைத் துணைக்கவரி வீசக்கொண்டார்' என்பது சுந்தரமூர்த்தி நாயனாரைக் குறிக்கும் என்றுங் கூறுவீர்போலும் என்றோர் உரைபகர்ந்து அவ்வளவிலே வாகைபுனைந்து கொண்டதாக எண்ணி மகிழ்வர். கவியரசு. கு. நடேசகவுண்டர் அவர்களும் இதனைப்பகர்ந்தது பெரிதும் வியப்பே. (அப்பர் வரலாற்றாராய்ச்சியும் தேவாரத் திறனாய்வும் கழகப்பதிப்பு) காண்க.

இன்னணம் மகிழ்வார் தாம்காட்டும் அத்தொடர்சுந்தரரைக் குறியாதுஎன்பதனையும்வேறொருவரைக்குறிப்பதுஎன்பதனையும் தக்க சான்றுகளுடன் நிறுவும் கடப்பாட்டினர். இக்கடமையை முற்றுவிக்கும்வாயில் காணாமையால் போலும் இங்ஙனங் கூறுவதோடு இன்னோர் அமைவாராயினர்.

துணைக்கவரி வீசுவார் சுந்தரமூர்த்திகளே என்று கொள்ளுதற்குச் சிறிதேனும் இடர்ப்பாடு இன்று. இன்றாகவும் இன்னோர் தம்களிப்புக்குக் காரணம் அறிகிலம். நம்பியாரூரர் நாவுக்கரசுகட்குப் பிற்காலத்தே தோன்றியவரன்றோ! அவரை அப்பர் பெருமான் பேசுதல் கூடுமோ எனின் உரைப்போம். துணைக் கவரி வீசிய நிகழ்ச்சி சுந்தரர் பெருமானுடைய முன்னிலைமைக் கண் அவர் ஆலால சுந்தரராகக் கயிலையில் வைகிய ஞான்று- நடைபெற்றதேயன்றி அவர் சுந்தரமூர்த்தி நாயனாராக இந்நிலவுலகத்தில் நிலவிய ஞான்று நடைபெற்றதன்று. சுந்தரரின் முன்னிலைமையினைச் சேக்கிழாரும் "அந்தமில்புகழாலால சுந்தரன், சுந்தரத்திருத்தொண்டத்தொகைத்தமிழ், வந்துபாடிய வண்ணமுரை செய்வோம்' என்று நினைவுறுத்தலை எண்ணுக. எனவே துணைக்கவரி வீசுதல் அப்பர்பெருமானுக்குப் பல்லாயிரமாண்டுகட்குமுற்பட்டு நிகழ்ந்துவந்த ஒன்றேயாம். எனவே

அதனை அப்பர் கூறுதல் கூடாமையாதல் யாங்ஙனம்? இதனால் 'சுந்தரனைத் துணைக்கவரி வீசக்கொண்டார்' என்பது சுந்தர மூர்த்திகளைச் சுட்டுவதாகக் கோடலே பொருத்தமுடையதும் உண்மைக்கு இசைவதும் ஆகும் என்க.

## 8. வாசகன் – பொருட்குழப்பம்

இனி வாசகன் என்ற சொல் வாயிலோன் எனப் பொருள் படும் என நிறுவத் தமிழ் வரலாறுடையாரும் ஏனையரும் முயல்வாராயினர். அஃதே அப்பர் திருவுள்ளமெனில் வாசகன் என்று மயக்கத்துட்படுத்தாது வாயிலன் என்றே கூறியிருப்பர். வாசகன் என்ற வாயிலோன் என்பது பொருளல்லாமையும் கருதுக. எனவே இவர் கூற்று கூறுபட்டொழிந்ததென்க. நடேசகவுண்டர் 'நந்தீசனைக் குடகுழவாசகனுக் கொண்டார்' என்று மொழிமாற்றிப் பொருள்கொள்க என்றுரைத்துப்பொருள் கூறும் கடப்பாட்டைக் கடக்கமுயன்றார். இஃதும் ஒவ்வாது. என்னை? ஆற்றொழுக்காகப் பொருள் கொள்ளக் கூடுங்கால் மொழிமாற்றம் வேண்டிய தெற்றுக்கோ? நீவிர்கூறும் பொருள் எங்கருத்துக்குடன்பாடன்றாகலின் மொழி மாற்றிப் பொருள் கண்டோமெனில் நூல்களில் தங்கருத்தை மறுக்கும் தொடர் காண்பார் யாவரும் இந்நெறிபிடித்தொழுகின் இலக்கியங்கள் தம் கருத்தை இழக்க நேரிடுமே என்க. அன்றியும் அப்பர் பெருமான் இவ்வாறு மொழிபிறழ வைத்தருளிய தென்னையோ என்றொருகடாவும் எழுமால். செய்யுள் நோக்கிப் பிறழ வைத்தா ரெனல் ஏலாது. 'குடமுழவா சகனுநந் தீசற்கொண்டார்' என்று கூறவும் ஒவ்வுமாகலின். எனவே மொழிமாற்றிப் பொருள் காணப்புகுதல் சிறப்பு அன்று. வாய்மையை விளம்பும் கருவி யாவதுமின்றென்க.

வாசகன் என்ற சொல் தூதுவன் என்னும் பொருளது. இறைவனைத் தொழவரும் தேவர் வரவை இறைவற்கு உணர்த்தி ஆணைபெற்று தேவரை உட்புகவிடல் நந்தியெம் பெருமான் பணி. இதனை உணர்த்தவே அப்பெருமான் வாசகன் என்றார் என்பர். வாயிலன் என்று கூறியிருப்பின் இங்ஙன் பல்லாற்றானும் இடர்ப்பட்டுப் பொருள்கொள்ள நேராது. அன்றியும் இப்பொருள் கூறுவோர் தூது எனத் திருக்குறளில் விரித்துக் கூறப் பெற்றிருப்பதை முதலில் பயின்று பின்னர்த் தாம்கூறும் பொருள் ஏற்புடைத்தா என்பதைச் சிந்தித்துத்தெளிவார்களாக.

மற்றும் இன்னோர் கூறும் பணிவாயிலார்க்கு உரித்து. அவரைத் தூதுவர் என்று எந்தநூலுங் கூறக்கண்டிலேம். 'வாயி லோயே வாயிலோயே' என்பது சிலப்பதிகாரம். நான்முகன்

வேள்விக்கு நந்தியெம்பெருமான் எழுந்தருளியது சிவனுருக்கு ஒத்தவர் என்றநிலையில். தூதுவர் என்ற நிலையிலன்று. இது தோற்று நான்முகக் கடவுண்முன் தோன்றலுந் தொழுது, போற்றியே தொழுதிருத்தின னென்பவோர் பொலன்மணித் தவிசில்' எனவரும் கந்தபுராணத்தாலும் நிலையுதலுறும். தூது வர்க்கு இத்துணைச் சிறப்புச் செய்யார் என்க. இதனல் வாசகன் என்பது தூதுவன் எனப் பொருள்படாதெனல் தேற்றம்.

வாசகன் என்பது திருமுகம் வாசிப்பவனைக் குறிக்கும் என்பர். நந்தியெம்பெருமானுக்கு இப்பணி நிலைக்க முழுமுதல் வனை இறைவனுக்குத் திருமுகந் தீட்டும் ஆற்றலுடையார் ஒருவரையும் இன்னோர் காட்டல் வேண்டுமே. காட்டுவதோடு நில்லாது ஒரு திருமுகந்தீட்டச் செய்து அதனைச் சிவபிரான்பால் உய்த்து நந்திதேவரை 'வாசிக்க'ச்செய்து திருமுகம் வாசிக்கும் பதவியை நந்திதேவருக்கு உறுதிப்படுத்திக் கொள்வாராக. சிவனுர், நந்தியெம்பிரான் ஆய இவர்கள் பெருமை குன்றவும் கேட்போர்க்கு நகை தோன்றவும் செய்யும் இன்னபொருள் களையும் கூசாது மொழிதந்தனரே! இவ்வண்ணம் பலதிறப் பணிகளையும் நந்தியெம்பெருமானுக்குக் கூட்டும் தமிழ்வரலா றுடையார்,

> " நந்தியை வாயிற் காப்போனக வுடையவனே, தனக்குப் பிரதியாய் வேதாகமப் பொருள்களை முனிவர் முதலியோருக்கு உபதேசித்த நந்தியை உடையவனே என்று தோத்திரிப்பது இயல்புதானே "

என்று அந்நூல் பக்கம் 102-இல்வினவி நந்திதேவருக்கு 'வாசகன்' என்ற சொல்மூலமாக ஆசிரியர் பணியையும் வழங்கி யுள்ளார். சப்தகல்பதுருமம் என்ற வடநூல் புராணம் முதலிய வற்றை வாசித்துச் சொல்வோன் என்று வாசகன் என்ற சொல்லுக்குப் பொருள் கூறுதல் கண்டதும் அப்பணியையும் நந்தியெம்பெருமானுக்கு விதிக்கமுயல்வாராயினர். ஆயின் இப் பணிகுரவரது ஆமாறு யாங்ஙனம்? பெரிய எழுத்து அல்லிய ரசாணி மாலைமுதல் விராடபருவம் வரை " வாசித்து "ச் சொல்லு வோரும் புராணச் சொற் பொழிவாளரும் உளரே! இவரெல்லாம் ஆசிரியன்மாரா? பல்கலைக் கழகத்துப் பதவியாகிய ரீடர் (Reader) என்ற சொல்லுக்கும் இதற்கும் பொருளாற்றுமை கண்டுகுரவர் என்று கொண்டாரா? வாசகன் என்ற சொல்லுக்கு அகராதியில் உள்ள அத்தனை பொருள்களையும் எழுதி இப்படிக் கொள்ளலாகாதா அப்படிக் கொள்ளலாகாதா என்னும் இவர் அச்சொல்லின் உண்மைப் பொருளைக்கூற இயலாதவராய் நின்றும்.

"குடமுழநந்தீசனை வாசகனுக்கொண்டார் என்பது இவ்வாறு பொருள் படாது என்பார் கூற்றை அறிவு உடையார் கொள்ளாரென விடுக"

என்றொரு முடிவு கூறவன்மை பெற்றது யாங்ஙனமோ? ஒருவர் கூறியபொருள் பிழையெனில் உரியபொருளைச் சான்றுகளோடு காட்டி நிறுவுதலே சான்றோர் ஒழுக்கமாம். அதனை விடுத்து அகராதிப் பொருள்களை எல்லாம் வரைந்து கொண்டு இப்படியும் கூறலாம் அப்படியும் கூறலாம் என வழக்காடுவது சிறப்பிற்றாமா? அல்லார் படைமேல் அரியெனப்பாய்ந்தான் என்புழிவாசகன் என்பதற்கு மணிவாசகர் என்ற பொருளை இவர் கழித்தது போன்றே அரி என்பதற்குச் சிங்கம் என்ற பொருளைக் கழித்து குரங்கு. பன்றி, வண்டு. தவளை, பாம்பு, குதிரை முதலிய பொருள்களையிட்டுக் குரங்கெனப்பாய்ந்தான், பன்றிஎனப்பாய்ந்தான், வண்டெனப்பாய்ந்தான், தவளை எனப் பாய்ந்தான், பாம்பெனப்பாய்ந்தான், வண்டெனப்பாய்ந்தான் என்று எழுதி விட்டு அரி என்ற சொல் இவ்வாறு பொருள்படாதென்பார் கூற்றை அறிவுடையார் கொள்ளாரெனவிடுக என்று கூறின் அறிஞர் என்ன நினைப்பர்? அன்றியும் தமிழ்வரலாறு பக்கம் 99-இல்

"வாசகன் என்னும் மொழி மாணிக்கவாசகன் எனப் பொருள்படும் என்கின்றனர். சான்றோர் அம் மொழியை அவ்வாறு பிரயோகம் செய்திருந்தால் காட்டலாமே. மாணிக்கவாசகரைச் சொல்லுமிடத்து சுருங்கக் கூறலைக் கருதி ஒருவர் வாசகன் என்று சுட்டி யிருந்தால் அதைக் காட்டலாகாது"

என்று காணப்படுகிறது. முதலில் காட்டுக என்பதும் மாணிக்கவாசகரைச் சுட்டிய முதற்குறையாயின் காட்டேல் என்பதும் நகை விளைப்பனவே. விடைவழு, வினுவழு முதலிய போலத் தடைவழு என்பதொன்றும் உளதாதலைக் காட்டும். இந்நூலுக்குத் தமிழகம் ஆற்றவேண்டும் கைம்மாறும் பெரிதே! இதுகொண்டே திருமுறை வரலாற்றாசிரியரும் முதற்குறை யுண்மையை ஒப்புவாராயினர். இன்னோர்காட்டும் இத்தனைப் பொருள்களும் தேவார ஆசிரியன் மார்காலத்தில் பயிற்சியி லிருந்தன என்பதையும் இவர் சார்பினர் நிறுவுதல் வேண்டுமே! யாவருங்கருதும் 'மொழியுடையான்' என்ற பொருளில்தான் வாசகர் என்ற சொல் பயின்றுள்ளமையை 'மாதிவர் பாகன் மறைபயின்ற வாசகன்' என்னுந் திருவாசகமும் விளக்குகின்றது.

(தொடரும்)

உ
சிவமயம்.

# புத்தாண்டு வாழ்த்து'

**திரு. அரங்க. முத்துமணி**
மாவட்டப்பதிவாளர் (தணிக்கை), தஞ்சாவூர்.

### வெண்பா

அண்ணல்நம் சண்முகப்பேர் ஆண்டகைதன் [பொன்னடிகள்
எண்ணி மகிழ்ந்தே இறைஞ்சுகிறேன் — மண்மீதில்
நல்லறங்கள் யாவும் நயந்துமிகச் செய்வதனல்
பல்லோரும் காண்பர் பயன்!

### வேறு

துன்முகியாம் யாண்டினுக்கே வழிய னுப்பித்
"துந்துபி"தான் முழங்கிவரக் கண்டோம்! எல்லா
நன்மைகளும் மலர்ந்திடுக; நல்ல றங்கள்
நாட்டினிலே ஓங்கிடுக! இறைவன் காட்டும்
இன்னருளால் இல்லங்கள் சோலை போல
இலங்கட்டும்; எண்ணங்கள் வெற்றிகாண்க!
அன்பென்னும் அருவியிலே திளைத்தேநாளும்
அகமகிழ்ந்து திருமுறைகள் ஓதி வாழ்வோம்!

திருத்தருமை யாதீனம் செய்யு மாப்போல்
திருத்தொண்டுசெய்வதற்கே உறுதிகொள்வோம்!
பெருமைமிகு சைவமுடன் தமிழும் ஓங்கப்,
பிறக்கின்ற புத்தாண்டு வழிகாட் டட்டும்!
"குருஞான சம்பந்தர்" பெயரால் மன்றம்
குவலயத்தில் தோன்றட்டும்; அப்பர் போல,
அருந்தொண்டு பலசெய்து நாளும் நாளும்
ஆலயங்கள் வழிபாட்டில் மேன்மை காண்போம்!


---

தருமையாதீனத் திருமடத்திற்கு வருகைபுரிந்த




வானமாமலை மடம் ஸ்ரீமத் இராமானுஜ ஜீயர் சுவாமிகளை
ஆதீனச் சார்பில் வரவேற்றல்

தருமையாதீனத் திருமடத்தில்



ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்
வானமாமலை மடம் ஸ்ரீமத் இராமானுஜ ஜீயர் சுவாமிகள்
வரவேற்பு விழாவில் அறவுரை அருளுதல்



வானமாமலை மடம் ஸ்ரீமத் இராமானுஜ ஜீயர் சுவாமிகள்
அன்பர்கட்கு அறவுரை வழங்குதல்

# திருத்தண்டலைநீள்நெறி, திருக்கோட்டூர்த் தலச் சிறப்புக்கள்

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், திருவாசக உரைமணி,

**வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ.,**

திருத்தண்டலைநீள்நெறி, திருக்கோட்டூர் ஆகிய இருதலங்களும் சோழவள நாட்டில் காவிரித் தென்கரைத் தலங்களில் 110, 111 ஆவது திருத்தலங்களாக எண்ணப் பெறுவனவாகும். இவை திருஞானசம்பந்தர் அருளிய ஒவ்வொரு திருப்பதிகத்தைப் பெற்றவை. திருத்தண்டலைநீள்நெறி, அரிவாட்டாய நாயனர் இறைவனுக்குச் செந்நெல் அரிசி, மாவடு, செங்கீரை ஆகியவைகளை நிவேதனப் பொருளாக நாள்தோறும் அளித்து முத்தியடைந்த தலம். திருக்கோட்டூர் திருஞானசம்பந்தர் அருளிய தேவாரம் பெற்ற திருக்கோயிலையும் கருவூர்த் தேவர் அருளிய திருவிசைப்பாப்பெற்ற மணியம்பலத்தையும் உடையது.

## 1. திருத்தண்டலைநீள்நெறி

இத்தலம் தஞ்சை மாவட்டத்தில் திருத்துறைப்பூண்டி தாலூகாவில் திருவாரூர் திருத்துறைப்பூண்டி பேருந்து வழியில் உள்ளது. திருத்துறைப்பூண்டி, மணலி இரயில் நிலயத்தில் இறங்கியும் வரலாம். பேருந்தில் வருவோர் கோயில் வாயிலில் இறங்கலாம். இத்திருத்தலம் தண்டலைச்சேரி என வழங்கப் பெறுகிறது. ஊரின்பெயர் தண்டலைகோயிலின் பெயர் நீள்நெறி.

**தலப்பெருமை :**

திருஞானசம்பந்தர் அருளிய தேவாரத் திருப்பதிகம் பெற்றது. காவிரித் தென்கரைத் தலங்களில் 110 ஆவது தலம். கோச்செங்கட்சோழ மன்னர் கட்டியமாடக்கோயிலை உடையது. ஆமை அவதாரம்கொண்ட திருமால் செருக்குற்றுக் கடலைக் கலக்கச் சிவபெருமான் ஆமையைக் கொன்று அதன் ஓட்டை அணிந்தருளியபதி. அரிவாட்டாய நாயனர் வறுமையுற்ற காலத்தும் இறைவனுக்குத் தான் செய்துவந்த நிவேதனப்

பணியை விடாமல் செய்து பசி மயக்கால் தான் பெருமானுக்குக் கொண்டுசென்ற மாவடு செங்கீரை ஆகியன கமரில்விழ, தான் செய்துவந்த தொண்டுக்கு இடையூறு நேர்ந்ததே என ஊட்டியை அரிவாளால் அறுத்துக்கொள்ள முற்பட்டபோது இறைவன் வெளிப்பட்டு அவர் குடும்பத்திற்கு வீடுபேறு அருளிய தலம். அரிவாட்டாயர் அவதரித்த கணமங்கலம் இவ் ஊருக்குக் கிழக்கே 1. கி. மீ. தூரத்தில் உள்ளது. படிக்காசு முனிவர் இவ்வூர் இறைவர்மேல் உலகநீதிகள் பலவற்றையும் இணைத்துப் பாடியருளிய தண்டலையார் சதகம் தமிழுலகம் அறிந்த நூலாகும்.

**கோயிலமைப்பு :**

கோச்செங்கட் சோழ மன்னர் கட்டிய மாடக்கோயில்களில் ஒன்று இத்திருக்கோயில். இதனைத் திருஞானசம்பந்தர் அருளிய இத்தலத் தேவாரத் திருப்பதிகத்துள் 'செம்பியன் கோச் செங்கண் நிருபர் தண்டலைநீள்நெறி காண்மினே' என அருளிச் செய்துள்ளார். பெருந்துச் சாலைக்கு மேல்பால் கோயில் அமைந்துள்ளது. கிழக்கு நோக்கிய சந்நிதி. எதிரே சாலைக்குக் கீழ்ப்புறம் தீர்த்தம் உள்ளது. தீர்த்தக் கரையில் விநாயகர் கோயில் உள்ளது.

இத்தலத் திருக்கோயில் நாட்டுக்கோட்டை நகரத்தார் திருப் பணிகளோடு அழகுற அமைந்து விளங்குகிறது. இராஜகோபுர வாயிலைக் கடந்தவுடன் பிராகாரம் உள்ளது. அதன் மேற்கு மூலையில் விநாயகர் தனிக் கோயிலில் விளங்குகின்றார். அடுத்து ஒரிலைக்குருந்தின்கீழ்த் தலலிங்கமும் நந்திதேவரும் உள்ளனர். வடமேற்குமூலையில் தனிக்கோயிலில் வள்ளி தெய்வயானை அம்மையுடன் ஆறுமுகப் பெருமான் எழுந்தருளி யுள்ளார். கிழக்குத் திருமாளப்பத்தியில் ஐயப்பன், நவக்கிர கங்கள், வியாக்ரபாதர் பதஞ்சலிமுனிவர்கள் பூசித்த இலிங் கங்கள், சூரியன், சந்திரன் உள்ளனர். சுவாமிகோயிலின்தெற்கு கோஷ்டத்தில் தக்ஷிணாமூர்த்தியும் வடக்குக்கோஷ்டத்தில் துர்க்கையும் உள்ளனர்.

சுவாமி கோயில் அர்த்த மண்டபம் மகாமண்டபங்களோடு காட்சிதருகிறது. திருவாயிலில் தலத்திருப்பதிகக் கல்வெட்டு விளங்குகிறது.

மகாமண்டபத்தின் தென்புறத்தில் கோச்செங்கட் சோழர் அரிவாட்டாய நாயனார் சமயாசாரியர் திருவுருவங்கள் உள்ளன.

வடபால் பஞ்சமூர்த்திகள் அரிவாட்டாயர் திருவுருவங்களும் நடராசர் சந்நிதியும் உள்ளன. சுவாமி கோயில் வாயிலில் துவார விநாயகர், அரிவாட்டாயர்க்கு அருள் செய்த ஐதிகச் சிற்பம் துவாரபாலகர்களை வழிபட்டு நீள்நெறிநாதரைத் தரிசிக்கலாம்.

விரும்பும் திங்களும் கங்கையும் விம்மவே
சுரும்பும் தும்பியும் சூழ்சடை யார்க்கிடம்
கரும்பும் செந்நெலும் காய்கமு கின்வளம்
நெருங்கும் தண்டலை நீள்நெறி காண்மினே.

என்ற இத்தலத்தேவாரத் திருப்பாடலை ஓதி வழிபடுவோம். அம்பாள்கோயில் இராஜகோபுரத்தை அடுத்துள்ளது. தெற்கு நோக்கியசந்நிதி. அருள்மிகு ஞானம்பிகை அருளே திருவுருவாய் விளங்கி வழிபடுவார்க்கு வேண்டும் வரங்கள் பலவும் நல்கி வருகிறார்.

## மூர்த்திகள் :

இறைவன் திருப்பெயர் அருள்மிகு நீள்நெறிநாதர். இறைவி திருப்பெயர் அருள்மிகு ஞானம்பிகை. தலமரம் – ஓரிலைக் குருந்தம். தீர்த்தம் – ஓமகதீர்த்தம் ; தைப்பூச நாளில்நீராடு வார்க்கு எல்லா நலங்களும் தருவது.

## தேவாரத் திருப்பதிகம் :

திருஞானசம்பந்த சுவாமிகள் திருவீழிமிழலையிலிருந்து திருமறைக்காட்டுக்கு எழுந்தருளியபோது இத்தலத்திற்கு எழுந் தருளி நீள்நெறிநாதரை வழிபட்டுத் திருப்பதிகம் அருளிச் செய்தார் எனப் பெரியபுராணத்தால் (திருஞான சம்பந்தர் புராணம் – 575.) அறியலாம். இத்தலத் திருப்பதிகத்தில் 4, 5, 6, 7 ஆம் செய்யுட்கள் மறைந்துள்ளன. திருப்பாடல்களில் மருதவளம் பேசப்படுகிறது. கரும்பு, நெல், கமுகு ஆகியன செழித்துள்ளதையும், நீர்நிலையில், எருமைகள் கன்றை நினைந்து சொரிந்த பால் பரவித் தோன்றுதலையும், சிப்பி, சங்கு, முத்து ஆகியன பெருகி உள்ளதையும் குறித்துள்ளார். கோச்செங்கட் சோழரால் இத்திருக்கோயில் கட்டப்பெற்றதுஎன்றும், குறிப்பிடு கிறார். இறைவன் விரும்பி உறையும் இடம் நீள்நெறி என்றும் இத்தலத்தைச் சென்று வழிபடுமின் என்றும் அருளிச் செய்து உள்ளார். இத்தலத் திருப்பதிகத்தை ஓதி வழிபடுவார்க்குப் பிறப்பில்லை எனப் பதிகப்பயன் கூறப்படுகிறது.

## அரிவாட்டாய நாயனர் :

இத்தலத்தைச் சேர்ந்த உட்கிராமமான கணமங்கலம் ( இக்காலம் கண்ணந்தங்குடி என வழங்குவது ) என்னும் பதியில் செல்வச் செழுமைமிக்க வேளாண் குடியில்தோன்றி யவர் இந்நாயனர். இவரது இயற்பெயர் தாயனர் என்பதாகும். இவர் தண்டலைநீள்நெறியில் விளங்கும் பெருமானுக்குச் செந்நெல்லரிசியும் செங்கீரையும் மாவடுவும் கொண்டுசென்று சிவவேதியர்கள்மூலம் சிவபெருமானுக்குத் திருவமுது செய் வித்துவரும் திருத்தொண்டைக் கடப்பாடாகச் செய்துவந்தார்.

மின்னு செஞ்சடை வேதியர்க்கு ஆமென்று
செந்நெல் இன்னமு தோடுசெங் கீரையும்
மன்னு பைந்துணர் மாவடுவுங் கொணர்ந்து
அன்ன என்றும் அமுதுசெய் விப்பரால்

என்பது இவர் திருத்தொண்டை இனிது விளக்கும் பெரிய புராணச் செய்யுள்.

## திருத்தொண்டில் உறுதி :

தாயனரது அன்பின் பெருமையை உலகறியச் செய்யத் திருவுளங்கொண்ட பெருமான் அவரது செல்வங்கள் குறைந்து போகுமாறு செய்தருளினர். வேழமுண்ட விளாங்கனி போல விரைவில் செல்வங்கள் அழிந்தன. வறுமை வந்தபோதும் தாயனர் தாம்செய்துவந்த திருத்தொண்டினை மன உறுதியோடு செய்துவந்தார். செல்வராக விளங்கிய நாயனர்கூலிக்கு நெல லறுக்கும் நிலைக்கு ஆளானர். கூலியாகத் தமக்குக்கிடைத்த சம்பாநெல் அனைத்தையும் பெருமானின் திருவமுதுக்கு உரிய தாக்கியும் கார்நெல்லைத் தமக்கு உணவாகக்கொண்டும்வாழ்ந்து வந்தார். இறைவன் அவ்வூர் வயல்களிலெல்லாம் செந்நெல் லாகவே விளையுமாறு செய்தார். ஒருநாள் தாயனர்க்குக் கூலி யாகக்கிடைத்த நெல் அனைத்தும் செந்நெல்லாகவேயிருந்தன. தாயனர் அப்போதும் அனைத்தையும் சிவபெருமானுக் குரிய தாக்கித் தாம் பட்டினிகிடந்தார்.

நாள்தோறும் தமக்கு உணவில்லையாயினும் அவரது மனைவியார் பறித்துச்சமைத்த கீரையை உண்டும் சிலநாள் தண்ணீர் அருந்தியும் திருத்தொண்டைவிடாமல் செய்துவந்தார் தாயனர்.

ஒருநாள் தாயனுர் இறைவன் திருவமுதுக்கு உரியதாகுமாறு செந்நெல்லரிசி மாவடு கீரை ஆகியவற்றைக்கூடையில் எடுத்துக் கொண்டு தண்டலைநீணெறி நோக்கிச் சென்ருர். அவர்தம் துணைவியார் பஞ்சகவ்வியத்தை ஏந்திக்கொண்டு உடன்வந்தார்.

வயற்பாதை, கோடைகாலத்தில் ஏற்படும் வயல்வெடிப்பு வழி. உணவின்றிப் பலநாள் பட்டினிகிடந்ததால் தாயனுர் பசியால் மயங்கிக் கால்தள்ளாடி வயல்வழியில் கீழேவீழ்ந்தார். உடன்வந்த அவர்மனைவியார் ஒருகையால் அவரைத் தாங்கிப் பிடித்துக் கொண்டார். அதற்குள்கூடைகீழேவிழ்ந்து அதிலிருந்த கீரை மாவடு அனைத்தும் வெப்பில் சிதறிச்சிந்தின. அதனைக் கண்ட தாயனுர் இன்று தமதுப்பணி தடைப்பட்டதே என்று வருந்தி இனிநாம் உயிரோடுஇருந்து என்னபயன் என்று எண்ணி இடையில் இருந்த அரிவாளை எடுத்துக் கழுத்தில்வைத்து எம்பெருமான் இங்கு இவற்றை ஏற்றுக் கொள்ளவில்லையானல் என் ஊட்டியை அரிந்துகொண்டு உயிர்விடுவேன் என்று கூறித் தமது கழுத்தை அரிய முற்பட்டார்.

தாயனுரின் செயலைத்தடுக்க விழைந்த பெருமான் கமரி லிருந்து இடதுகையை வெளியில் நீட்டி நாயனுரின் கையைப் பற்றித்தடுத்துக் கொண்டே மாவடுவைக்கடிக்கும் விடேல் விடேல் என்ற ஓசையை உண்டாக்கி அவர் கொணர்ந்து வந்த திருவமுதை ஏற்று விடைமீது உமையம்மையோடு தோன்றிக் காட்சித்தந்து அருள்புரிந்தார் சிவபெருமான்அருளால் நாயனுரும் அவர்தம் மனைவியரும் சிவலோகம் அடைந்து இன்புற்றனர்.

தாயனுர் என்னும் பெயர் ஊட்டியில் அரிவாள்பூட்டி அரிய முற்பட்ட அவர்தம் அருஞ்செயல் காரணமாக அரிவாள்தாய நாயனுர் என வழங்கிவருகிறது.

## கோச்செங்கட்சோழர்:

சோழநாட்டில் திருவானைக்கா என்னும் தலத்தில் வெண் ணுவல்மரத்தின் கீழ்விளங்கிய சிவலிங்கப்பெருமானை தன் வாய் நூலால் பந்தர்செய்து நாவல்சருகுகள் இறைவன் முடிமீது உதிரா வண்ணம்பக்திசெய்து காத்துவந்தது ஒருசிலந்தி. அச்சிவலிங்கப் பெருமானிடம் வெள்ளையானை ஒன்றும் அன்புசெலுத்திவந்தது. சிலந்தி கட்டும் வலையைத் தூய்மையற்றது என்று துதிக்கையால் அழித்து தனவாயால்நீர் கொணர்ந்து அபிடேகம் செய்தும் மலர்கள் பறித்துச்சார்த்தியும் யானை பக்திசெய்தது. சிலந்தி நாள் தோறும் பெருமான்முடிமீது இலைஉதிராவண்ணம் தான் முயன்று

கட்டும் வலையை அழித்து வந்த யானையின்செயலுக்கு வருந்தி அதன் துதிக்கையைப்பற்றி துதிக்கை துளைவழியே உள்ளே புகுந்து கடித்தது. வருத்தம் பொருத யானை கையினை நிலத்தின் மீதுமோதி அறைந்து உயிர்துறந்தது. துதிக்கைக்குள் நுழைந்த சிலந்தியும் இறந்தது. ஆனைக்கா இறைவர் அவ்வெள்ளானைக்கு வீடுபேறு அருளினார். சிலந்தியைச் சோழர்குடியில்கோச்செங்கட் சோழராகப்பிறக்குமாறு அருள்புரிந்தார்.

சோழமன்னன் சுபதேவனுக்கும் கமலவதிஎன்னும் பட்டத்து அரசிக்கும் திருமகனாகக்கோச்செங்கட்சோழர் பிறந்தார். பிறந்து வளர்ந்து இறைவனருளால் முன்னைப் பிறப்புணர்வோடு சைவ நெறி தழைக்க யானைஏறுத எழுபது மாடக்கோயில்களைக் கட்டினார். அழகிய கோயில்கள் பலவற்றைக்கட்டியும் அரனிடம் நீங்காத அன்பு செலுத்தியும் வாழ்ந்து தில்லை அம்பலவாணரின் திருவடி நீழலை அடைந்தார். கோச்செங்கட்சோழர் அறுபான் மும்மை நாயன்மார்களுள் ஒருவராகப் போற்றப்பெறும் சிறப்பைப்பெற்றவர். இம்மன்னர் கட்டிய மாடக்கோயில்களில் ஒன்றாக இத்தலம் விளங்குவதை இத்தலத் தேவாரத் திருப் பதிகத்தின் ஒன்பதாம் திருப்பாடலில் திருஞானசம்பந்தரும் குறித்தருளியுள்ளார்.

**படிக்காசுப் புலவர் ;**

தொண்டைமண்டலம் தென்களத்தூரில் பிறந்தவர் பல தலங்களுக்கும் இவர் யாத்திரையாகச் சென்றபோது தில்லையில் நடராசப்பெருமான் இவருக்கு நாள்தோறும் ஐந்து பொற்காசு களைப் படிமீதுவைத்து அளித்துவந்ததால் படிக்காசுப் புலவர் எனப் பெயர்பெற்றார். தருமையாதீனத்தில் ஒன்பதாவது மகாசந்நிதானமாக விளங்கிய ஸ்ரீலஸ்ரீ திருநாவுக்கரசு தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளிடம் துறவறம் பெற்று ஆதீன அடியவரானார். திருப்புள்ளிருக்குவேளூர்க் கலம்பகம் இயற்றினார். இவரதுகவிதைகளைப் புகழ்ந்து 'மட்டாரும்தென் களந்தைப் படிக்காசன் உரைத்ததமிழ் வரைந்த ஏட்டைப், பட்டாலே சூழ்ந்தாலும் மூவுலகும் பரிமளிக்கும் பரிந்தவ் வேட்டைத் தொட்டாலும் கைமணக்கும் சொன்னாலும் வாய் மணக்கும் துய்யசேற்றில் நட்டாலும் தமிழ்ப்பயிராய் விளைந் திடுமே பாட்டினுடை நளினந்தானே'என பலபட்டடைச் சொக்கநாதப் பிள்ளை பாராட்டியுள்ளார். படிக்காசுப் புலவர் தண்டலைநீள்நெறி வந்துநீள்நெறி நாதரை வழிபட்டுப் பழமொழி களை அடிப்படையாக வைத்துப் பாடிய தண்டலையார் சதகம் தமிழ் இலக்கியங்களில் பலராலும் விரும்பிக் கற்கப்படும் நூல் களுள் ஒன்றாகவிளங்குகிறது. சதகநூல்களில்தலையானநூல்இது

வரம் அளிக்கும் தண்டலையார் திருக்கோயில்
உட்புகுந்து வலமாய்வந்து
ஒருவிளக்கா யினும்பசுவின் நெய்யுடன்தா
மரைநூலின் ஒளிரவைத்தால்
கருவிளக்கும் பிறப்புமில்லை இறப்புமில்லை
கைலாசம் காணியாகும்
திருவிளக்கிட் டார்தமையே தெய்வம்அளித்
திடும் வினையும் தீருந்தானே.

என்பது அச்சதகப் பாடல்களில் ஒன்றாகும்.

### திருப்பணி, விழா, நிர்வாகம் :

தேவகோட்டை இராம. அரு. அரு. இராமநாதன் செட்டியாரும் அவருக்குப்பின் மணலி வேங்கடராமப்பிள்ளையும் திருப்பணிகள் புரிந்துள்ளனர். மார்கழித் திருவாதிரை விழாவும், தைத்திருவாதிரையில் அரிவாட்டாயர்க்கு அருள்புரிந்த ஐதிக விழாவும் நிகழ்ந்துவருகின்றன கோயில் தமிழ்நாடு இந்து அறநிலயத்துறையின் ஆட்சிக்கு உட்பட்டது.

## 2. திருக்கோட்டூர்

இத்தலம் தஞ்சைமாவட்டத்தில் மன்னார்குடி தாலூகாவில் உள்ளது. மன்னார்குடியிலிருந்து திருத்துறைப்பூண்டி செல்லும் பேருந்துகளில் செல்லலாம். திருத்துறைப் பூண்டியிலிருந்தும் இத்தலத்தை அடையலாம். பெரிய கிராமமாகக் கோட்டூர் விளங்குகிறது

### தலப்பெருமை :

திருஞானசம்பந்தர் அருளிய தேவாரத் திருப்பதிகம் ஒன்றைப்பெற்றது. காவிரித் தென்கரைத் தலங்களில் 111ஆவது தலம். இத்தலத்தில் இரண்டு திருக்கோயில்கள் உள்ளன. மேற்கே உள்ள திருக்கோயில் திருஞான சம்பந்தரின் தேவாரத் திருப்பதிகத்தைப் பெற்றது. கிழக்கே உள்ள திருக்கோயில் கீழ்க்கோட்டூர் மணி அம்பலம் என்ற பெயருடையது. இது கருவூர்த்தேவர் அருளிய திருவிசைப்பாப்பாடல் பெற்றது. தேவர்களும் குச்சரமுனிவர்களும் பூசித்துப் பேறுபெற்ற சிறப்பினது இச்செய்திகள் இவ்வூர்த் தேவாரத் திருப்பதிகத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளன. இத்தலத்தில் தோன்றிய வன்னிமரத் தடியில் சிவபெருமானை வழிபட்டுப் பிரமதேவர் அருள்பெற்றார்.

ததீசிமுனிவர் இறப்பிற்க்குக் காரணமான இந்திரன் இத்தலத்தில் சிவபெருமானை வழிபட்டுப் பிரமஹத்தி நீங்கப்பெற்ருன். ஐரா வதம் இறைவனை வழிபட்டு அரம்பையைக் கவர்ந்த குற்றத்திற் காக இறைவனுல் சிதறுண்ணப்பட்டுப் பின் மணியம்பலத்தில் சிவலிங்கம் தாபித்து வழிபட்டு அருள் பெற்றதலம். இந்திர சேனன் பிராமணர்களை நிந்தித்த பழி தீர வழிபட்ட தலம். பிதிர்க்கடன்கள் செய்வித்தற்குரியதலம்.

**கோயிலமைப்பு:**

பெருந்துசாலையில் கோட்டூர்க் கொழுந்தீசர் ஆலயத்தின் வளைவு நம்மை வரவேற்கிறது. சாலையிலிருந்து இவ்வழியே சென்ருல் கோயிலை அடையலாம். மேற்குநோக்கிய சந்நிதி. கோட்டூர் அறங்காவலர்களும் பிற அன்பர்களும் திருக்கோயிலை அழகுறத் திருப்பணிகள் செய்துள்ளனர், கோயிலின்வாயிலில் திருமணமண்டபம் உள்ளது. இராஜ கோபுரம் அமைக்கத் திட்டமிட்டுப் போடப்பட்ட அடித்தளத்துடன் கட்டைக் கோபுரம் உள்ளது. கோயிலின் வாயிலைக்கடந்தவுடன் அலுவலகம் உள்ளது. சந்நிதியில் கொடிமரம் நந்தி பலிபீடங்கள் உள்ளன.

மூன்று நிலைகளுடன் இரண்டாம் கோபுரம் காட்சி தருகிறது. வாயிலின் இருபுறங்களிலும் விநாயகர் முருகன் விளங்கு கின்றனர்.

வாயிலைக்கடந்து கோயிலை அடைவோம். ஒரு பிராகாரத் துடன் அழகிய கருங்கல் திருப்பணிகளைப் பெற்று ஆலயம் விளங்குகிறது. முதற் பிராகாரத்தில் விநாயகர், சந்திரசேகரர், சோமாஸ்கந்தர் அடுத்து மகாவிஷ்ணு சமயாசாரியர், தபசு அம்பாள் உமாமகேசர், அர்த்தநாரீசுரர், பிரதோஷநாயகர், மீனுட்சிசுந்தரேசுரர், வள்ளி தெய்வயானை அம்மைகளோடு முருகன், மகாலக்ஷ்மி ஆகியோர் தனித்தனி மண்டபங்களில் எழுந்தருளி உள்ளனர்.

சுவாமி மேற்குநோக்கியும் சுவாமிசந்நிதியின் வடபால் சுவாமியைப் பார்த்து அம்பிகை கிழக்கு நோக்கியும் விளங்கு கின்றனர். கோயிலுக்குத் தனியழகு தரும் ஆஸ்தான மண்டபம் கருங்கல் வேலைப்பாடுகளோடு காட்சி தருகிறது. வாயிலில் சலவைக் கல்லில் தலப்பதிகம் பொறித்து வைக்கப் பெற்றுள்ளது. மகாமண்டபத்தில் நடராசர் தெற்குநோக்கி விளங்குகிருர். தனியே வாயிலும் சபாமண்டபமும் உள்ளன.

இறைவன் சந்நிதி கர்ப்பக்கிருகம் அர்த்த மண்டபங்களோடு அமைந்து நம் மனத்தைக் கவர்கிறது. சந்நிதியில் நின்று தலத் திருப்பதிகத்தை ஓதி வழிபடுவோம்.

பாடியாடும் மெய்ப் பத்தர்கட்கருள்செயும் முத்தினைப்
[ பவளத்தைத்
தேடிமாலயன் காணவொண்ணாதஅத் திருவினைத் தெரிவைமார்
கூடியாடவர் கைதொழு கோட்டூர்நற் கொழுந்தேயென்
[ றெழுவார்கள்
நீடுசெல்வத்த ராகியிவ் வுலகினில் நிகழ்தரு புகழாரே.

என்பது இத்தலத்தேவாரம். கோட்டூர் இறைவனை வழிபட எழுவார்க்கு இறைவன் அருள்புரிவதைப் பாடல்கள் தோறும் குறிப்பிடுகிறார் ஞானசம்பந்தர். அப்பதிகத்தைச் சந்நிதியில் ஓதி வழிபடும்போது நம் மனம் எளிதில் இறைவன்பால் ஈடுபடு வதை உணரலாம்.

அம்பாள் திருக்கோயில் கர்ப்பக்கிருகம் அர்த்தமண்டபம் ஆகியவற்றோடு அழகுற அமைந்துள்ளது. அம்பிகை அருள்மிகு தேன்மொழியம்மை கருணை செய்யக்காத்திருக்கும் நிலையில் விளங்குகிறார். அம்பிகைக் கோயிலுக்கு எதிரே நவக்கிரகங்கள் உள்ளன. சுவாமிகோயில் கோஷ்டங்களில் துர்க்கை பிர்மா, இலிங்கோற்பவர், தக்ஷிணாமூர்த்தி விளங்குகின்றனர்.

## மூர்த்திகள் :

இறைவன் திருப்பெயர் : அருள்மிகு கொழுந்தீசர்கொழுந்து நாதர் எனவும் கூறப்பெறும். வடமொழியில் சமீவனேசர் என வழங்குவர். அம்பிகை திருப்பெயர் அருள்மிகு தேனார்மொழி யம்மை. வடமொழியில் மதுரபாஷிணி என்பர். இத்தலத்தில் விளங்கும் தபசு அம்பாள், உமாமகேசுரர், அர்த்தநாரீசுரர், பிரதோஷநாயகர் திருவுருவங்கள் கலையழகுடன் விளங்குபவை.

## தீர்த்தம் :

முள்ளியாறு, சிவகங்கை, பிரமதீர்த்தம், சிவதீர்த்தம் மண்டைதீர்த்தம், அமுததீர்த்தம், இந்திரதீர்த்தம், விசுவகன்ம தீர்த்தம், அரம்பாதீர்த்தம் என ஒன்பது தீர்த்தங்கள் உள்ளன தலமரம் : வன்னி.

## தருமையாதீனம் குருமூர்த்தம் :

தருமையாதீனம் 8 ஆவது மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அழகிய திருச்சிற்றம்பல தேசிக சுவாமிகள் பரிபூரணம் அடைந்த

குருமூர்த்தம் இத்தல த்திருக்கோயிலின் தென்பால் உள்ளது. இவர்கள் மலடிக்கு பரிகலச்சேடம் அளித்து மகப்பேறு அளித்த சிறப்பிற்குரியவர்கள். தலயாத்திரையாக இத்தலத்திற்கு எழுந் தருளி ஸ்ரீ கொழுந்தீசரை வழிபட்டுப் பரிபூரணம் அடையப் போவதை முன்னரே அறிந்து தமக்குப் பிற்றேன்றலாக ஸ்ரீலஸ்ரீ திருநாவுக்கரசு தேசிக சுவாமிகட்கு ஞானபிஷேகம் செய்வித்து, இத்தலத்தில் பரிபூரணம் அடைந்தார்கள். ஆண்டுதோறும் இவர்கள் குருபூஜைத் திருநாள் கார்த்திகைத் திங்கள் சுக்கில ஏகாதசியில் நிகழ்ந்து வருகிறது.

**தலத்திருப்பதிகமும், நூல்களும் :**

திருஞானசம்பந்தர் அருளிய ஒருதிருப்பதிகமும் அவரே அருளிய தனித்திருப்பாடலும், அப்பர் சுந்தரர் அருளிய தனித் தேவாரப்பாடல்களும் உள்ளன. பெரியபுராணத்தில் சேக்கிழார் ஞானசம்பந்தர் வருகையை விவரித்து இத்தலத்தைக் குறிப் பிட்டுப் பாடியபாடல் உள்ளது. ( பெரிய – திருஞான – 574 ) செய்யுள் வடிவில் தலபுராணமும் தலவரலாறுகளும் தேவஸ் தானத்தில் வெளியிடப் பெற்றுள்ளன.

ஞானசம்பந்தர் இத்தலத்திருப்பதிகத்தில்பாடல்கள்தோறும் பயன்களைக் குறிப்பிட்டு அருளியிருப்பது தனிச்சிறப்பு. இத் தலத்தின் வளமையையும் இயற்கை எழிலையும் ஞானசமபந்தர் தேவாரப் பாடல்களில் குறிப்பிட்டுள்ளார். கொழுந்தீசரை வழிபடுவார் புகழ், செல்வம் பெறுவர்என்றும் வினைகள் நீங்கித் திருவருள் நலம் பெறுவர்என்றும் அமரர் உலகினில் இனிது வாழ்வர் என்றும் அருளிச்செய்துள்ளார்.

## புராணவரலாறுகள்

**பிரமன் வழிபட்டது :**

தேவர்கள் திருப்பாற்கடலைக் கடைந்து அமுதம் எடுத்துப் பொற்குடங்களில் நிரப்பியபோது ஆயிரத்தெட்டு துளிகள் சிதறின. அத்துளி சிதறிய இடங்களில் மருது நெல்லி முதலிய தெய்வாம்சம் பொருந்திய மரங்கள் தோன்றின. இத்தலத்தில் விழுந்த துளி வன்னிவனமாகக் கிளர்ந்தெழுந்தது. முனிவர்கள் பலரும் வந்து தவம்செய்து சித்தியும் முத்தியும் பெறும் புனித இடமாகும் சிறப்பை இத்தலம் பெற்றது. சிவனை நிந்தித்த செருக்கால் தன் தலைகளில் ஒன்றையும் படைப்புத்தொழிலையும் இழந்த நான்முகன் இத்தலத்திற்கு வந்து சிவலிங்கப்பிரதிட்டை செய்து கொழுந்தீசரை வழிபட்டு இறைவனருளையும்படைப்புத் தொழிலையும் பெற்றான்.

## இந்திரன் வழிபட்டது :

விருத்திராசுரனைக் கொல்வதற்குத் ததீசி முனிவரின்முதுகுத் தண்டைப் பெற்றான் இந்திரன். முனிவரின் இறப்பிற்குக் காரண மான இந்திரனைப் பிரமஹத்தி பிடித்தது. இந்திரன் நாரதமுனிவர் சொற்படி இத்தலத்துக்கு வந்து தீர்த்த நீராடி கொழுந்தீசரை வழிபட்டுப் பிரமஹத்தி நீங்கப்பெற்றான்.

## ஐராவதம் வழிபட்டது :

இத்தலத்திற்குவந்துவழிபட்டுக்கொண்டிருந்த அரம்பையை இந்திரனது ஏவலின்படி ஐராவதம் வந்து தன் துதிக்கையால் கவர்ந்தது. சிவபெருமான் ஐராவதத்தைச் சினந்தார். ஐராவதத் தின் உடல் சிதறி மண்டை ஒருபக்கமும், கொம்பொருபக்கமும் மணியொரு பக்கமுமாக வீழ்ந்தன. இந்திரன் ஐராவதத்தை எழுப்பித்தருமாறு இறைவனை வேண்ட பெருமான் அருளால் ஐராவதம் எழுந்தது. இந்திரன் அரம்பையையும் ஐராவதத்தை யும் பெற்று விண்ணுலகடைந்தான்.

ஐராவதம் கோட்டால் அரம்பையை எடுத்ததால் இத்தலம் கோட்டூர் எனவும், மண்டை விழுந்த இடம் மண்டை தீர்த்தம் எனவும், மணி விழுந்த இடம் மணியம்பலம் எனவும் பெயர் பெற்றன.

## மணி அம்பலம் :

ஐராவதம் தான்செய்த தவறுக்கு வருந்தி இறைவனை இத் தலத்தின் கீழ்பால் பிரதிட்டை செய்து வழிபட்டதலம் கீழைக் கோயில் எனவழங்கும் மணியம்பலமாகும். இத்திருக்கோயிலில் விளங்கும் இறைவன் திருப்பெயர் ஐராவதேசுரர் என வழங்கப் பெறுகிறது. கருவூர்த்தேவர் அருளிய திருவிசைப்பாப்பெற்றது இத்திருக்கோயில். இறைவன் திருநடம்புரியும் அறுபத்துநான்கு தலங்களில் இது மணியம்பலம் எனவும் கூறப்படுகிறது. ஆனிப் பௌர்ணமியில் இறைவன் இங்கு திருநடம் புரிந்தருளினார் எனக் கூறப்படுகிறது.

## இந்திரசேனன் அருள்பெற்றது :

காம்பீலிநாட்டுமன்னன் இந்திரசேனன்முற்பிறவியில்செய்த பழியால் துன்புற்று இத்தலத்தை அடைந்து நலம்பெற்றான்.

**சாலிகன் பிதிர்க்கடன் :**

சாலிகன் என்னும் அந்தணன் தன்தந்தையின் அஸ்தியைக் கங்கையில் விடுதற்கு எண்ணிப் புறப்பட்டான். நாரதர் சாலிகனிடம் காசிக்கு நிகரான தலம் கோட்டூர் என்றும் கங்கைக்கு நிகரானது பிரமதீர்த்தம் என்றும்கூற அவர் சொற்படியே அஸ்தியைத் தீர்த்தக்கரையில் வைத்த அளவில் அது இத்தலத்தில் சிவலிங்க உருவாயிற்று என்பது வரலாறு.

**பருந்தும் எலும்பும் :**

பாலிநாட்டில் உற்பலம் என்றஊரில் செல்வவளம் பொருந்திய ஒரு அந்தணர். இளமையின் அறியாமையாலும், பாவத்தாலும் செல்வத்தை நற்கருமங்களில் செலவிடாமல் அழித்து முதுமையில் சிவபூசைசெய்யும் அன்பர்ஒருவரது இல்லம்சென்று அவர் செய்யும் பூசையைத் தரிசித்தும் சிவப்பிரசாதத்தை உண்டும் வாழ்ந்து இடியேறுண்டு இறந்தார். அவரது எலும்பு ஒன்றைப் பருந்து கௌவிச்செல்லும்போது அவ்வெலும்பு பிரம தீர்த்தத்தில்தவறிவிழுந்தது. நரகிற்கிடந்துழன்ற அவ்வந்தணரின் ஆன்மா அப்புண்ணியத்தால் சிவலோகத்தை அடைந்தது.

இவ்வரலாறுகளால் இத்தலம் சமீவனம், வன்னிவனம் பிரமபுரம், இந்திரபுரம், அரம்பேச்சுரம், ஐராவதேச்சுரம், கோட்டூர் என்னும் பெயர்களைப்பெற்றது. இறைவன் சமீவனேசர், வன்னிவனேசர் பிரமேசர், இந்திரேசுவரர், அரம்பேசுவரர், ஐராவதேசுவரர் முதலிய பெயர்களைப் பெற்றார்.

**கல்வெட்டு :**

இக்கோயிலில் 23 கல்வெட்டுக்கள் படியெடுக்கப்பட்டு உள்ளன. பெரும்பாலும் சோழர்களுடையன. இவைகளுள் விளக்குத்தானம், விளக்கும்பணதானம், கோயிலுக்குநிலதானம் முதலியவை பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளன. மூன்றாம் குலோத்துங்கன் கல்வெட்டு ஒன்றில் குலோத்துங்க சோழ வளநாட்டுக் குன்றத்தூரில் சேக்கிழான் பாலறுவாயன் களப்பாளராயன் என்ற ஒரு பெருமகனார் பெயர் குறிக்கப்பட்டுள்ளது. இதில் சேக்கிழார் தம்பியாரது பெயர்வருதல் காண்க திருத்தருப்பூண்டி மடாதிபதி திருமாளிகைப் பிச்சர் பெயர் காணப்படுகிறது.

இத்திருக்கோயிலில் பெயர் குறிப்பிடப் பெறாத பரகேசரிவர்மன் காலத்தது ஒன்று, முதலாம் இராசராச சோழன் காலத்தது ஒன்று, முதற்குலோத்துங்கசோழன் காலத்தன நான்கு,

இரண்டாம் இராசாதிராசன் காலத்தன ஐந்து, மூன்றுங் குலோத்துங்கன் காலத்தன நான்கு, மூன்றும் இராசராசன் காலத்தன நான்கு, ஆக, சோழமன்னர்களின் கல்வெட்டுக்கள் பத்தொன்பதும், ஒரு வயலில் நட்டுவைத்துள்ள தஞ்சை மராட்டிய மன்னருடைய கல்வெட்டு ஒன்றும், மற்றொருவயலில் நட்டு வைத்துள்ள தளவாய் அனந்தராயர் சாஹேப் கல்வெட்டு ஒன்றும், ஒரு தோப்பில் நட்டு வைத்துள்ள தஞ்சை ரகுநாத நாயக்கர் காலத்தது ஒன்றும், மற்றொரு தோப்பில் நட்டு வைக்கப்பெற்ற கல்வெட்டு ஒன்றும் ஆக மொத்தத்தில் இருபத்து மூன்று கல்வெட்டுக்கள் இருக்கின்றன. இக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் இறைவர். இரண்டாம் இராசாதிராசன் கல்வெட்டில், கொழுந்தாண்டார் என்றும் மூன்றும் இராசராச தேவன் காலத்தில் மூலஸ்தானம் உடையார் என்றும், தஞ்சை மராட்டிய மன்னர் ( மகாராஜா சாஹேப் ) கல்வெட்டில் கொழுந்தீசுவர சுவாமி என்றும் கூறப்பெற்றுள்ளனர்.

முதலாம் இராசராச சோழதேவர் காலத்தில் இவ்வூர், அருண்மொழித் தேவவளநாட்டு நென்மலி நாட்டிலுள்ள கோட்டூர் எனவும் முதல் குலோத்துங்கன் கல்வெட்டில் இராசேந்திர சோழவளநாட்டு நென்மலி நாட்டிலுள்ள கோட்டூர் எனவும் குறிக்கப்பெற்றுள்ளது. எனவே அருண்மொழித்தேவ வளநாடு என்றும் பெயர் பெற்ற செய்தி புலனுகின்றது. மேலும் இக்கோயிலுள்ள முதற்குலோத்துங்க சோழமன்னனது 27;- ஆம் ஆண்டுக்கல்வெட்டு, இவ்வூர், அருமொழித்தேவவள நாட்டிற்கு உட்பட்டிருந்ததையும், அம்மன்னனிது 50 ம் ஆண்டில் பொறிக்கப்பெற்ற கல்வெட்டு இவ்வூர் இராஜேந்திர சோழவள நாட்டுக்கு உட்பட்டிருந்ததையும் உணர்த்துவதால் இராசேந்திர சோழ வளநாடு என்னும் பெயர் முதற் குலோத்துங்க சோழனது ஆட்சியின் பிற்பகுதியில் ஏற்பட்டது என்பது உறுதியாகும். ( இராசேந்திர சோழன் என்பது முதற் குலோத்துங்கனுடைய பெயர் களுள் ஒன்றுகும். )

மூன்றுங் குலோத்துங்க சோழதேவரின் இரண்டாம் ஆண்டில் குலோத்துங்க சோழ வளநாட்டுக் குன்றத்தூர்ச் சேக்கிழான் பல்லவ அரையன் களப்பாளராயர் ஒருநுந்தா விளக்கினுக்குப் பணம் உதவியுள்ளார். இரகுநாத நாயக்கர் பத்துவேலி நிலத்தைக் கொடுத்துள்ளார்.

இத்திருக்கோயிலில் திருஞானம் பெற்றப்பிள்ளையாரை எழுந்தருளுவித்தவர் நாகமங்கலமுடையான் அம்பலங் கோயில்·

கொண்டவர் ஆவர். இச்செய்தி மூன்றும் இராசராச சோழ தேவரின் ஒன்பதாம் ஆட்சி யாண்டில் நிகழ்ந்ததாகும். இவ் வம்பலங் கோவில் கொண்டவர், இம்மன்னனது 18 ஆம் ஆண்டில் இப்பிள்ளையார்க்குத் திருவமுது உள்ளிட்டவை களுக்கு நிலம் அளித்துள்ளார். அதில் இப்பிள்ளையார், திருஞானம் பெற்ற **ஆளுடைய பிள்ளையார்** எனக் குறிக்கப் பெற்றுள்ளார்.

இராசேந்திரசோழ வளநாட்டு வெண்டாழை வேளிர்க் கூற்றத்துத் திருத்தருப்பூண்டியில், திருமாளிகைப் பிச்சர் என்ற மடாதிபதியைப்பற்றி மூன்றாங் குலோத்துங்க சோழதேவரது மூன்றாம் ஆண்டுக் கல்வெட்டில் காணப் பெற்றுள்ளது.

## திருப்பணி, விழா, நிருவாகம் :

இத்தலத் திருக்கோயிலில் கோட்டூர் பெருநிலக்கிழார் திரு. சீனுவாச முதலியார், திரு. சுவாமிநாதஉடையார், பூவனூர் திரு. சுப்பையா முதலியார் முதலிய அன்பர்களின் பெருமுயற் சியால் சீரிய திருப்பணிகள் செய்யப்பட்டுள்ளன. மாசிமகம், வைகாசி விசாகம் முதலிய நாட்களில் கோட்டூர் கொழுந்தீசர் கோயிலிலும், மணியம்பலம் திருக்கோயிலிலும் திருவிழாக்கள் நடந்து வருகின்றன. திருக்கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையினரின் சீரிய பராமரிப்பில் விளங்கி வருகின்றது.

நிலமார் தருகண்டனே நெற்றியோர்
    கண்ணனே யொற்றைவிடைச்
சூலமார் தருகையனே துன்றுபைம்
    பொழில்கள் சூழ்ந்தழகாய
கோலமாமலர் மணங்கமழ்கோட்டூர் நற்
    கொழுந்தேயென் றெழுவார்கள்
சாலநீடல மதனிடைப் புகழ்மிகத்
    தாங்குவர் பாங்காவே.

பந்துலாவிரற் பவளவாய்த்தேன்மொழிப்
    பாவையோடுருவாரும்
கொந்துலாமலர் விரிபொழிற்கோட்டூர் நற்
    கொழுந்தினைச் செழும்பவளம்
வந்துலாவிய காழியுண்ஞானசம்
    பந்தன்வாய்ந்துரைசெய்த
சந்துலாந்தமிழ் மாலைகள்வல்லவர்
    தாங்குவர்புகழாலே.

கட்டுரை எண். 25

# அபிராமி அந்தாதி

புலவர். திரு. K. சந்தானராமன், M A., B. Lit., D. P. P. A., D. U. N., I. U.

மணியே, மணியின் ஒளியே, ஒளிரும் மணிபுனைந்த
அணியே, அணியும் அணிக்கழகே, அணுகாதவர்க்குப்
பிணியே, பிணிக்கு மருந்தே, அமரர் பெருவிருந்தே,
பணியேன் ஒருவரை நின்பத்மபாதம் பணிந்தபின்னே. 24

## அ. மணியே!

(1) "மாணிக்க மணியே!" என அழைக்கிறார்.

(2) சிவந்த நிறமும் ஒளியும் உடைய மாணிக்கம் போல் அன்னையின் திருமேனி திகழ்கின்றது. முதற் பாடலிலேயே "உணர்வுடையோர் மதிக்கின்ற மாணிக்கம்" எனக் குறிப்பிட்டார். நிறம், ஒளி, உயர்வு ஆகிய இயல்புகளைக் கருதி அன்னையினை 'மணியே' என்றார்.

(3) தலையாயவற்றினை, சிறந்தவற்றினை, மற்றும் முதன்மை யானவர்களை 'மணி' எனக் குறிப்பிடுதல் மரபு. 'மணியான கருத்துக்கள்' என்வும், 'கலைமாமணி' எனவும், 'இன்னிசை மணி' எனவும் பலவாறு கூறுகிறோம் அல்லவா? அவ்வாறே அருமையானவளும், முதன்மையானவளும், சிறப்புடையவளும் ஆகிய அபிராமியினை 'மணியே' என அழைக்கிறார்.

(4) 'சிந்தாமணி' என்னும் மணி தன்னை உடையவர் சிந்தித்தவற்றை (வேண்டியவற்றை) உடனே அளிக்கும் ஆற்றலுடைய அரிய மணியாகும். அம்மணிபோல் அம்பிகை தன்னடியார் நினைத்தவற்றை அளித்தலால் அவளை 'மணியே' என்கிறார்.

(5) 'குருவிந்தம்' என்னும் மணியினைப் பற்றிய குறிப்பு சகஸ்ரநாமத்தில் வருகிறது. தாமரை நிறம் கொண்ட சிவப்பு

இரத்தினம் 'குருவிந்தம்' எனப்படும். இதனைத் தரிப்பதால் ஆசைகள் நிறைவேறி நல்ல விஷயங்களில் பற்று ஏற்படும். மற்றும் மங்கலம் பெருகி பக்தி திடப்படும் என்பர். அம்மணியின் செந்தாமரைச் சிவப்பு நிறமுடைமையாலும் அம்மணியினைப் போல் ஆசையினை நிறைவேற்றி மங்கலம் பெருகச் செய்வதாலும் அன்னையினை 'மணியே' என்கிறார்.

(6) குண்டலினியோகிகளுக்கு சகஸ்ரார கமலத்தில் பொழியும் அமுதத் துளிகள் நாளடைவில் கெட்டியாகி மணியாக மாறிவிடும் என்பர். சிரசின் (தலையின்) உச்சியில் தோன்றும் அம்மணியே 'சிரோன்மணி' என அழைக்கப்படும். (புலமையிற் சிறந்தோரைச் சிறப்பிக்கும் சொல்லாகவும் வடமொழியில் 'சிரோன்மணி' யினைக் கையாண்டு வருகின்றனர்) மூலாதாரத்திலிருந்து எழும்பும் குண்டலினியே சகஸ்ராரத்தில் அமுதாய்ப் பின் சிரோன்மணியாய் மாறுகிறது. அதுவும் அம்பிகையின் வடிவே ஆதலால் 'மணியே' என்கிறார்.

(7) ஆசான்களுள் (குருமார்களுள்) மணியானவர் தக்ஷிணாமூர்த்தியாகிய சிவபெருமானே யாவார். 'கோகழியாண்ட குருமணி' என்பது சிவபுராணம். அந்தக் குருமணியாகிய தக்ஷிணாமூர்த்தி வடிவினள் என சகஸ்ரநாமம் குறிப்பிடுகிறது. "தக்ஷிணாமூர்த்திரூபிணி" என்பது நாமா.

(8) 'வஞ்சி மருங்குல் மனோன்மணி' என அபிராமி பட்டர் முன்னரே குறிப்பிட்டார். மனத்தினை மேல் நிலைக்கு எழுப்பும் மனோன்மணி என்ற சக்தியாகவும், அன்னையே திகழ்வதால் அவளை மணியே என்கிறார்.

(9) ஸ்ரீ சுத்த சத்வானந்தாவின் கற்பகாம்பாள் அந்தாதி அன்னையினைக் கீழ்க்கண்டவாறு பல மணிகளாகக் குறிப்பிடுகிறது.

திருமணி, கற்பகத் தெய்வமணி, மெய்திகழ்மணி, நற்
கருமணி, ஞானக் கலைமணி, பூணும் கனகமணி,
உருமணி, மந்திர உன்மணி, காணும் உயர்மயிலைப்
பெருமணி, கண்மணி, பேறளிக்கும் செல்வமணியே"

## ஆ. மணியின் ஒளியே!

(1) அம்மணியின் ஒளியாகவும் இருப்பவளே என அழைக்கிறார்.

(2) வைரம் போன்றவற்றிற்கு இயற்கையில் ஒளியில்லை, ஒளிக்கதிர்களைப் பிறவற்றிலிருந்து வாங்கிப் பிரதிபலிக்கின்றன.

ஆனால் அம்பிகை என்னும் மணி தன்னிடத்திலேயே இயற்கையான ஒளி பொருந்தியிருக்கிறாள். அவ்வொளியும் அவளது அம்சமேயாதலால் ' மணியின் ஒளியே ' எனவும் அழைக்கிறார்.

(3) சிவம் என்னும் செம்மணியின் ஒளியாகத் திகழ்பவள் அம்பிகை. வேதமுங்கடந்து நின்ற விமலனைத் தனது ஒளியினால் காட்டுகிறாள் அம்பிகை. ' உ ' – சிவனை, ' மா ' – அடையாளம் காட்டுபவள் என, ' உமா ' என்ற நாமத்தின் பொருள் கூறுகையில் பாஸ்கர ராயர் விளக்குகிறார்.

(4) ' தினமணி ' என்றால் சூரியன். சூரியனின் சுடரும், விண்மணிகளின் ஒளியாகவும் இருப்பவள் ஆதலால் ' மணியின் ஒளியே ' என்கிறார்.

(5) முன் விளக்கத்தில் குறிப்பிட்ட சிவபெருமான் என்னும் குருமணியின், ஞானவொளியாகத் திகழ்வதால் அவள் மணியின் ஒளி.

(6) ' காந்தி ' :– ஒளியாய் இருப்பவள்என சகஸ்ரநாமமும் உரைக்கிறது.

## இ. ஒளிரும் மணிப்புனைந்த அணியே !

(1) ' ஒளிவீசும் மாணிக்க மணிகளை இழைத்த அணியே ' எனவும் அழைக்கிறார்.

(2) ' மணி ' யெனத் தனியாகக் குறிப்பிட்டுப் பின்னர் பல மணிகள் இழைத்த அணியாகவும் குறிப்பிடுகிறார். அவள் ஒன்றாய் அரும்பிப் பலவாய் விரிபவள். பலவற்றின் சேர்க்கையாகவும் திகழ்பவள். ஒளிவீசும் பல மணிகள் இழைத்த அணி, காண்பாரை ஈர்ப்பதுபோல் தன்னொளியால் அனைத்துலகினையும் தன்பால் ஈர்ப்பவள்.

(3) நவக்கிரகங்களால் ஏற்படும் இன்னல்களைப் போக்கிக் கொள்ளவும், இன்னருளைப் பெறவும், அந்தந்த கிரகங்களுக்கு விருப்பமான மணிகளை அணிந்து வழிபடுதல் சிறப்பு என்று சோதிடநூலார் கூறுவர். நாளும் கோளும் அடியாரை வந்து நலியாமல் நல்லனவே செய்யும்படி அன்னை செய்து விடுவாள். அவ்வாறு அருள் செய்வதில், அவள் வெவ்வேறு கோள்களுக்கு உரிய – ப்ரீதியாள் வெவ்வேறு மணிகளை ஒன்றாக இழைத்துப் புனைந்த அணியாகவே திகழ்பவள்.

## ஈ. அணியும் அணிக்கு அழகே !

(1) ' அணியும் ஆபரணங்களுக்கு அழகே ' என்கிறார்.

(2) அணிகள் சாதாரணமாக அணிபவர்களுக்கு அழகு தரும். ஆனால் இவளால் அணிகள் அழகு அடைகின்றன. அணியால் தான் அழகு எய்தாமல் அணிக்குத் தானே அழகாகிருள். ஏழை எளிய மக்கள் அம்மன் திருவிழாக்கள் நடத்தும் பொழுது அவர்கள் அணிவிக்கும் முலாம் பூசிய நகைகளும், போலி வைரங்களும் அன்னைமீது அணிவிக்கப் படுவதால் அவை மிகவும் அழகாகக் காட்சி தருவதை நாம் கண் கூடாகக் காண்கின்றேம்.

(3) வடமொழி ஸ்காந்த புராணத்தில், பார்வதி தேவியினை மணக்கோலத்தில் அலங்கரித்த செய்தியினைக் கூறும் வியாச முனிவர் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிருர்.

"ஆகேசமாநகாக்ரம்து மணிபூஷணமண்டிதம், பூஷணஸ்ய வபுர் தேவ்யா: பூஷணம் நாஸ்யபூஷணம்" அதாவது, கேசம் முதல் கால்வரை இரத்தினபரணங்களால் அலங்கரிக்கப்பட்ட தேவியின் சரீரமானது அணிகலன்களுக்கு அணிகலனாக விளங்கியதே யன்றி அவளுடைய உடலுக்கு அழகை உண்டாக்கவில்லை.

## உ. அணுகாதவர்க்குப் பிணியே !

(1) தன்னை அணுகிப் புகலடையாதவர்க்குப் பிணியாக இருப்பவள்.

(2) 'பிணி' என்றசொல் 'கட்டு' எனவும் பொருள்கொடுக்குமாதலால் தன்னைச் சரணடையாதவர்களுக்கு அவள் பந்த பாசக் கட்டுகளாக இருக்கிருள் எனக் கொள்ளலாம். பின்னர் அவளே அவற்றை நீக்குகிருள்.

(3) 'பிணி) என்பது எளிதில் நீங்காத, எவராலும் நீக்க முடியாத பிறவிப் பிணியினையே குறிக்கும். தன்னைச் சரணடையும்வரை பிறவிப் பிணியாக இருப்பவள் பின், தானே அப் பிணியினை நீக்குகிருள்.

## ஊ. பிணிக்கு மருந்தே !

(1) அப்பிணிகளுக்கு மருந்தாகவும் இருப்பவள்.

(2) எளிதில் நீங்காப் பிறவிப் பிணியினைப் போக்கும் மருந்தும் அவளே. பிறவி அற்றுப் போகும் கடைசிப் பிறவியிலேயே அன்னையினை வழிபடும் பேறுகிட்டும் என்பது சாக்தர்களின் கொள்கை.

(3) உலகியலில், அவளை அணுகாதவர்களுக்கு நோய்களாகவும், பின் தானே அவற்றினை நீக்கும் மருந்தாகவும் இருக்கிறாள் எனவும் பொருள் கொள்வர். இன்றும், தீராத பல நோய்கள் அவள் அருளால் நீக்கப்படுவதை அடியார்களின் வாழ்வில் காண்கிறோம். புள்ளிருக்கும் வேளூர் அன்னையும், சமயபுரம் மாரிஅம்மனும் பிணிதீர்த்த வரலாறுகள் பலவுண்டு.

இந்துக்களும், கிறித்துவர்களும் இணைந்து வணங்கும் வேளாங்கன்னி மாதாவும் நோய்தீர்த்த வரலாறுகள் பலவுண்டு.

(4) "பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவ னடிசேரா தார்"

என்ற குறள் கருத்து "அணுகாதவர்க்குப் பிணியே பிணிக்கு மருந்தே" என்ற அடியில் பொதிந்துள்ளது.

(5) பிறவிப் பிணிவரை அனைத்து வியாதிகளையும் நீக்குவதால் அவளை சகஸ்ரநாமம் "சர்வவ்யாதி ப்ரசமனி" – 'அனைத்து நோய்களையும் நீக்குபவள்' எனப் புகழுகிறது.

### எ. அமரர் பெருவிருந்தே !

(1) "விண்ணவர்களின் விருந்தே !" என்கிறார்.

(2) அமரத்துவம் எய்திய தேவர்களின் விருந்தாக இருப்பவள் என நேராகப் பொருள் கொள்வதைவிட இங்கு, அமரர்களுக்கு விருந்தாக அளிக்கப்பட்ட 'அமுதாக' இருப்பவள் எனப் பொருள் கொள்வது மிகவும் பொருந்தும்.

(உ — A) "விண்மேவும் புலவருக்கு விருந்தாக வேலை மருந்தானதை நல்கும் மெல்லியலே" என தொண்ணூறாவது பாடலில் அபிராமி பட்டர் குறிப்பிடுவதே இக்கருத்துக்குத்தக்க அகச்சான்றாகும்.

(உ — B) குலசேகர பாண்டியன் இயற்றிய மதுராபுரி அம்பிகை மாலையில் "வடியிட்ட தெள்ளமுதின் வடிவே" எனக் குறிப்பிடுகிறார்.

(3) விருந்து என்பதற்குப் புதியது அல்லது புதுமை எனப் பொருள் கொண்டால் தேவர்களுக்குத் தனது விச்வரூபக் (பேருருக்) காட்சியாலும், திருவிளையாடல்களாலும் பல புதுமைகளை விளைவிப்பவள் எனவும் பொருள்படும்.

### ஏ. பணியேன் ஒருவரைநின் பத்மபாதம் பணிந்தபின்னே !

(1) நின் திருவடித் தாமரைகளை வணங்கியபிறகு வேறு ஒருவரையும் தமியேன் பணிய (வணங்க) மாட்டேன். சரபோஜி மன்னன் வந்த சமயம் அனைவரும் அவனது அரசநிலை கருதி

வணங்க அபிராமி பட்டர் மட்டும் அன்னையினை வணங்கியவராக இருந்தார் அல்லவா? அன்னையின் சொருபத்தியானத்தில் இருந்தமை தவிர வேறு என்னகாரணம் உண்டு என்பதற்கான குறிப்பும் இவ்வடியில் தெளிவாகக் கிடைக்கிறது.

(2) " இலன் என்னும் எவ்வம் உரையாமைஈதல்
குலனுடையான் கண்ணே உள "

' நான் இல்லாதவன் ' என்னும் துன்பச் சொல்லைக் கூறுவதற்கு முன்பே கொடுப்பது குலத்துதித்தோரின் இயல்பு என்கிறார் வள்ளுவர். அல்லது, யான இல்லாதவன் என்ற துன்பச்சொல்லை வேறு ஒருவரிடம் சென்று கூறவாய்ப்பின்றித் தானே நிறைய வாரி வழங்கிவிடுதல் குலனுடையானின் இயல்பு எனவும் கொள்ளலாம்.

அம்பிகை அவ்வாறே அடியார் தனது இல்லாமையினைக் கூறுமுன்பே கொடுப்பதனாலும், வேறு ஒருவரிடம் வேண்டாத நிலையில் வைத்து விடுவதாலும் பிறரைப் பணிய வேண்டியதில்லை. இது உலகியல் பொருளினை வேண்டுவோரின் நிலை.

(3) ஆனால் அபிராமிபட்டர் போன்றோர் பேரின்ப முத்தி நிலையொன்றினையே வேண்டி நின்றவர்கள்.

" சத்தியென்பாள் ஒரு சாதகப் பெண்பிள்ளை
முத்திக்கு நாயகி என்பதறி கிலார்
பத்தியைப் பாழில் உகுத்த அப்பாவிகள்
கத்தியை நாய்போற் கதருகின்றாரே "

என்ற திருமந்திரத்தில் திருமூலர் கூறியபடி முத்திக்கு நாயகியை அறிந்து முன் பணிந்தவர்கள் பின் வேறு ஒருவரைப் பணிய வேண்டியதில்லை. எனவே " பணியேன் ஒருவரை நின் பத்ம பாதம் பணிந்த பின்னே " என்றார்.

(4) மற்றும் ஏக தெய்வ உபாஸனை (ஒரே கடவுள் வழிபாடு) என்ற முறையில் வழிபடுவோர் வேறு ஒருவரை பணியாமை அனைவரும் அறிந்த ஒன்றே. ஆனால் இது 'செருக்கு' அல்ல. தனது வழிபடு கடவுளிடம் உள்ள அசையாத நம்பிக்கையேயாகும்.

(5) முத்திவரை அனைத்தும் அளிக்கவல்ல அன்னையினைச் சரண் புகுந்தபின், பூவுலகத்து மன்னர், வள்ளல் போன்றோரைச் சரண் என்று பணியாமை சான்றோர் கொள்கை. மன்னனைக் காண மறுத்து " நாமார்க்கும் குடியல்லோம், ...... பணிவோம் அல்லோம் " என்ற திருநாவுக்கரசரின் வாக்கு இதனைத் தெளிவாக்கும். அண்மையில் வாழ்ந்த தியாகராஜர் போன்றோரும் அங்ஙனம் கூறினர் அன்றோ?

(6) அனைத்தினுக்கும் மேலாகப் பிறரைப் பணியாமைக்கு ஒரு முக்கிய காரணம் உண்டு. ஒரு தேவி உபாஸகன் தகுதி யில்லாத ஒருவரை வணங்கினுல் - பணிந்தால் அவ்வணக்கத் தினுல் - பணிவினுல் - வணங்கப் படுபவர் பாதிப்புக்கு உள்ளாவர் என்ற கருத்து பாஸ்கரராயரின் வரலாற்றிலிருந்து தெரிகிறது. மகாராஷ்டிரத்திலிருந்து வந்து தஞ்சைத் தரணியில் பாஸ்கர ராஜ புரத்தில் வாழ்ந்து வந்த பாஸ்கரராயர் அடிக்கடி திருவிடைமருதூர் சென்றுவருவது வழக்கம். ஒருநாள், திருவிடை- மருதூரில், ஒரு வீட்டுத் திண்ணையில் உள்ள "சாய்மானத்தில்" சாய்ந்து எதிரிலுள்ள தூணில் காலை உதைந்தபடி கண்மூடிய நிலையில் இருந்தார் பாஸ்கர ராயர். அவ்வழியில் துறவியொருவர் சென்று கொண்டிருந்தார். அவருடன் இரண்டு மூன்று "முக்கி யஸ்தர்" களும் சென்று கொண்டிருந்தனர். துறவியினைக் கண்ட ஊர்மக்கள் வீதியெங்கும் விழுந்து வணங்கினர்.

தான் சாய்ந்து படுத்திருந்த வீட்டினைக் கடந்து துறவியும் பிறரும் சென்றது, பலரும் துறவியினை விழுந்து வணங்கியது எதனையும் அறியாது கண் மூடிய நிலையிலேயே பாஸ்கரராயர் இருந்தார். அதனைக் கண்ட 'முக்யஸ்தர்' கள் துறவியிடம் "பாஸ்கரராயரின் அலட்சியத்தினைப் பாருங்கள்" எனத் தூண்டினர். பாஸ்கரராயரின் அருகில்வந்து தனதுகையிலிருந்த 'பிரம்மதண்ட' தினுல் தட்டினுர் துறவி. கண் திறந்த பாஸ்கர ராயர் "வாருங்கள் ! அமருங்கள் !" என்ருர் அமைதியாக.

"அமருவதிருக்கட்டும் ! ஊரிலுள்ளோர் அனைவரும் துறவி யாகிய எம்மை வணங்குகின்றனர். நீர் மட்டும் ஏன் வணங்காது படுத்தபடி இருந்தீர் ?" என்ருர்.

"சுவாமி ! அடியேன் வணங்கங் கூடாது. மன்னிக்க வேண்டும்" என்ருர் பாஸ்கரராயர். அதன்காரணம் வருமாறு :- ஸ்ரீ வித்யா உபாஸகனை ஒருவர் குருமூலம் தீட்சை பெற்றுக் கொண்டவுடன் அன்னையின் வடிவாகவே ( ஸ்வருபமாகவே ) ஆகி விடுகிருள். எனவே அவர் தனது குருநாதர், அம்பிகை' தனது தாய், மற்ருெரு தேவி உபாஸகன் ஆகிய இவர்களைத் தவிர வேறு ஒருவரையும் வணங்கக் கூடாது என்பது மரபு. அவ்வாறு வணங்கினுல் வணங்கப் படுபவனுக்கே பாதிப்பு ஏற்படும். அதனை அப்போது உணராத துறவி துறவிக்கு எவரும் வணங்குதலே மரபு என வலியுறுத்தினுர்.

"அப்படியானுல் தங்களது 'பிரம்ம தண்டம்' சுவடிகள் ஆகியவற்றினைத் தயவுசெய்து திண்ணை மீது வையுங்கள்' என்ருர் ராயர். அவ்வாறே அவற்றினைவைத்தார் துறவி. விழுந்து

வணங்குகிறார் பாஸ்கரராயர். அந்தக் கணமே துறவியின் சுவடிகளும் பிரம்ம தண்டமும் தீப்பற்றி எரிந்து சாம்பலாயிற்று

"சுவாமி, அடியேன் அன்னையினை அழல் வண்ணமாகத் திகழும் 'சுவாதிஷ்டான' ஆதாரச் சக்கரத்தில் தியானித்த நிலையில் இருந்தேன். ஆகவேதான் அவை எரிந்தன. அதே கேடு தங்களுக்கு நிகழக் கூடாது என்ற எண்ணத்திலேயே தங்களை வணங்கவில்லை" என்றார் பாஸ்கரராயர்.

"யோகநிலையில் இருந்த தங்களை தவறாகப்புரிந்து கொண்டு விட்டேன்" என வருந்திச் சென்றார் அத்துறவி.

வலியத் தன்பால் வந்ததினால் தன்னுடைய ஆற்றலைக் காட்டிய பாஸ்கரராயர் அன்றுமுதல் அத்துறவி செல்லும் பாதையிலேயே இல்லாமல் தனது இருப்பிடத்தையும் வழியினையும் மாற்றிக் கொண்டார். ஏனெனில் துறவிக்கும் அவரது அடியார்களுக்கும் தன்னால் எந்தவிதமான மனக்கஷ்டமும் ஏற்பட்டுவிடக் கூடாது என்ற கருணையுள்ளம் கொண்டிருந்தார் அவர். எனவேதான் எப்போதும் அன்னையின் தியானத்திலும், யோகத்திலும் இருப்பவர்களாகிய அடியார்கள் பிறரைப் பணியார்கள். அதே காரணத்தினாலேயே மன்னர் சரபோஜியினை அபிராமி பட்டரும் பணியவில்லை. ஆணவமோ, அலட்சியமோ தான் பெரியவன் என்ற உயர்வு மனப்பான்மையோ காரணம் அல்ல. இதனை அவரே அடுத்த பாடலில் தெளிவாக்குகிறார். பிறரை வேண்டாத தன்னிறைவு எய்துதல் இப்பாடலின் பாராயண பலன் ஆகும்.

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

### Dharmapuram Adhinam

### Sri Amirthakadeswaraswami Devasthanam, Tirukkadaiyur

I am very happy and feel myself fortunate to visit this temple.

It is well maintained neat and clean. I am very unhappy to get the prayer book-let only in tamil language which I do not understand. It would have been better if it is printed in Sanskrit and Tamil. I hope the authorities will take note of it and provide the book-let in two languages i. e. Sanskrit and Tamil.

(S-d) Maghesan

3—4—82 Minister, Govt of India, New Delhi.

# செய்திகள்

## ஆயில்யத் திருநாள் ஆலய வழிபாடு

தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானத்தின் ஜன்ம நட்சத்திரமாகிய ஆயில்யத்திருநாள் ஆலயவழிபாடு 4—4—82 ஞாயிறன்று காலை திருக்கோட்டூர் அருள்மிகு கொழுந்தீசர் ஆலயத்திலும், மாலை திருத்தண்டலை நீள்நெறிநாதர் ஆலயத் திலும் மிகச் சிறப்பாக நடைபெற்றது. அவ்வத் திருக்கோயில் களில் விசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழ்த்தப்பெற்றன. தலத்திருப்பதிக பாராயணம் நிகழ்வுற்றது. ஆதீன வெளியீடாக அச்சிடப் பெற்ற தலத்திருப்பதிக நூல் வழிபாட்டின்போது வந்திருந்த அன்பர்கட்கு வழங்கப்பெற்றது. காலை திருக் கோட்டூர்த் திருக்கோயிலில் ஆதீனத்திருக்கூட்டத்து அடியவர் ஸ்ரீநெல்லையப்ப சுவாமிகள் தலப்பெருமை பற்றியும் திரு. சொ. முத்தையன் எம். ஏ. அவர்கள் வழிபாடு பற்றியும் விரிவுரை ஆற்றினர். மணலி. திரு. சுந்தரேசம்பிள்ளை திருமதி அம்பிகை அம்மாள் தம்பதிகள் இல்லத்தில் மகேஸ்வரபூசை நிகழ்வுற்றது. மாலை திருத்தண்டலை நீள்நெறித்திருக்கோயிலில் ஸ்ரீநெல்லை யப்ப சுவாமிகள் அரிவாட்டாய நாயனர் பற்றியும் திரு. வி. சா. குருசாமி தேசிகர், எம். ஏ. அவர்கள் தலப்பெருமைபற்றியும் திரு. சொ. முத்தையன், எம். ஏ. அவர்கள் தொண்டின் உறுதி பற்றியும் விரிவுரையாற்றினர். அன்பர்பலர் வந்திருந்து சுவாமி தரிசனம் செய்தும் சொற்பொழிவுகளைக் கேட்டும் பயனுற்றனர்

## வசந்த நவராத்திரிவிழா

தருமையாதீனம் ஸ்ரீ ஆனந்தபரவசர் பூங்காவில் திருக் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ வனதுர்க்கா தேவிக்கு வசந்த நவராத்திரிவிழா 26—3—82 வெள்ளிக்கிழமை யன்று தொடங்கிச் சிறப்பாக நடைபெற்றது. இந்நாட்களில் ஸ்ரீ வனதுர்க்காதேவிக்கு உலகநலன் கருதி விசேஷ அபிஷேக ஆராதனைகளும் நவசக்தி அர்ச்சனைமூலம் லட்சார்ச்சனையும் சப்தசதி மகாமந்திர அர்ச்சனையும் நிகழ்த்தப்பெற்றன. 2—4—82 வெள்ளிக்கிழமை காலை நவமியன்று, தசசண்டி வேள்வியும் இரவு லட்சார்ச்சனைப் பூர்த்தியும் நிகழ்வுற்றன். தேவியின் சந்நிதியில் சப்தசதி, அபிராமி அந்தாதி பாராயணங்கள் நடை

பெற்றன. இந்நாட்களில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடு ஆற்றி வந்திருந்த அன்பர்கட்கு அருட்பிரசாதம் வழங்கினர்கள். பக்தர்பலர் வழிபட்டுப் பயன்பெற்றனர்.

## தருமை ஆதீனத்திற்கு வானமாமலைமடம் ஸ்ரீ ஜீயர் சுவாமிகளின் வருகை

வைணவத் திருமடங்களின் ஆசாரியர்களில் ஒருவராக விளங்கும் ஸ்ரீமத். பரமஹம்ஸ பரமாசாரியார் ஸ்ரீ வானமாமலை இராமநுஜ ஜீயர் சுவாமிகள் அவர்கள் தருமையாதீனத்துக்கு 5—4—82 திங்கட்கிழமையன்று வருகைபுரிந்தார்கள். ஆதீனத் திருமடத்தில் சைவ வைணவ ஆசாரியர்களின் சந்திப்பு நடைபெற்றது. திருமடத்துக்கு வருகைதந்த ஸ்ரீமத் ஜீயர் சுவாமிகளை ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் பொன்னுடை போர்த்திச் சிறப்பித்தார்கள். ஸ்ரீமத் ஜீயர் சுவாமிகளும் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கட்குப் பொன்னுடை அணிவித்துத் தமது மகிழ்ச்சியைப் புலப்படுத்திக் கொண்டார்கள். இருவரும் பீடங்களில் எழுந்தருளியிருந்து சைவ வைணவ சமய தத்துவ ஒற்றுமைகளையும் அவற்றின் வளர்ச்சிக்குரிய வழிவகைகளையும் பற்றி உரையாடி மகிழ்ந்தார்கள். தருமையாதீனக் கல்விநிலையங்களின் சார்பில் ஸ்ரீ ஜீயர் சுவாமிகளுக்கு வரவேற்பு அளிக்கப் பெற்றது. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களும் ஸ்ரீ ஜீயர் சுவாமிகள் அவர்களும் அன்பர்களுக்கு அறவுரைகள் வழங்கியருளினர்கள்.

## பங்குனித் திங்கட் பெருவிழா

**வேளூரில் :—**

தருமையாதீனத்திற்குச் சொந்தமான வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில் 29—3—82 திங்கட்கிழமையன்று தொடங்கிப் பத்துநாட்கள் பங்குனி உத்திரப் பெருவிழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. கொடியேற்றம், சகோபுரக்காட்சி, திருத்தேர்விழா, தீர்த்தவிழா ஆகியவை சிறப்புத் திருநாட்களாகக் கொண்டாடப்பெற்றன. 31—3—82 அன்று தருமையாதீனத் தமிழ்ப்புலவர், திருவாசக உரைமணி, வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர், எம். ஏ., அவர்கள் 'காரைக்கால் அம்மையார்' பற்றியும் 1—4—82 திருமுறைவிழா, தேவாரவகுப்பு ஆண்டுவிழாவில் திரு. க. வச்சிரவேல் முதலியார் அவர்களும் 2—4—82 அன்று தருமையாதீனப் பல்கலைக் கல்லூரிப் பேராசிரியர் திரு. இரா. செல்வக்கணபதி, எம். ஏ. அவர்கள் 'அப்பூதிஅடிகளார்' பற்றியும் 3—4—82 அன்று வித்துவான் திருமதி ப. நீலா, எம். ஏ. அவர்கள் 'சுந்தரர்' பற்றியும் விரிவுரை

ஆற்றினர். திருமுறைவிழா நாளில் பண்ணிசை வாணர்களின் திருமுறைப் பாராயணத்துடன் திருமுறைகள் யானைமேல் திரு வீதியுலா நடைபெற்றது. அன்பர்பலர் வந்திருந்து, சுவாமி தரிசனம் செய்தும் விரிவுரைகளைக் கேட்டும் பயனடைந்தனர்.

**திருபுவனத்தில் :–**

தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருபுவனம் ஸ்ரீ கம்ப கரேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் 29—3—82 திங்கட்கிழமை தொடங்கிப் பத்துநாட்கள் பங்குனி உத்திரப்பெருவிழா சிறப் பாக நடைபெற்றது. கொடியேற்றம், தன்னைத்தான் அருச் சித்தல், சகோபுரக்காட்சி, திருக்கல்யாணவிழா, திருத்தேர்விழா' ஆகிய சிறப்புவிழா நாட்களில் பெருந்திரளான மக்கள் சுவாமி தரிசனம் செய்து பயன்பெற்றனர். விழாநாட்களில் 31—3—82 அன்று திரு. க. வச்சிரவேல் முதலியார், பி. ஏ. எல். டி. அவர்கள் 'திருக்குறிப்புத்தொண்டர்' பற்றியும் 1—4—82 அன்று தருமை யாதீனப் பல்கலைக்கல்லூரில் பேராசிரியர் திரு. மு. சிவச்சந்திரன் எம். ஏ., அவர்கள் 'சிறுத்தொண்டர்' பற்றியும் 2—4—82 திருமுறைவிழா, தேவாரவகுப்பு ஆண்டுவிழா அன்று தருமை ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணிமன்றப் பொறுப்பாளர் புலவர் திரு. சோமசுந்தரன் பரிசு வழங்கியும் 3—4—82 அன்று வித்துவான் திரு. சொ. முத்தையன், எம். ஏ. அவர்கள் 'கண்ணப்பர்' பற்றியும் உரையாற்றினர். திருமுறைவிழா நாளில்திருமுறைகள் அலங்கரிக்கப்பட்டு யானைமேல் வைக்கப்பெற்றுத் திருவீதியுலா நடைபெற்றது. 11—4—82 ஸ்ரீ சரபர் உற்சவத்தன்று ஸ்ரீ சரப மூர்த்திக்கு ஏகதின லட்சார்ச்சனையும் இரவு வெள்ளிரதக் காட்சியும் நிகழ்வுற்றன. அன்று ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றி அன்பர்கட்கு அருட் பிரசாதம் வழங்கினர்கள்.

**பேரளத்தில் :–**

தருமையாதீனத்திற்குச் சொந்தமான பேரளம் ஸ்ரீ சுயம்பு நாதசுவாமி தேவஸ்தானத்தில் உத்திரபாதத் தீர்த்தத்திருநாள் 7—4—82 புதன்கிழமையன்று ஏகதின உற்சவமாக மிகச்சிறப் பாகநடைபெற்றது. அன்றுகாலை பஞ்சமூர்த்திகளுக்கும் விசேஷ அபிஷேக ஆராதனைகளும் அக்னி புஷ்கரணி தீர்த்தத்தில் தீர்த்தம் கொடுத்தருளலும் இரவு திருவீதியுலாவும் நிகழ்வுற்றன. மாலை 7 மணியளவில் மாயூரம் தேசிய மேல்நிலைப்பள்ளித் தமிழாசிரியர், புலவர் திரு. ஆ. இராமபத்திரன், எம். ஏ. 'பார்வதி திருமணம்' பற்றி விரிவுரை ஆற்றினர். அன்பர்கள் சுவாமி தரிசனம் செய்தும் சொற்பொழிவினைக் கேட்டும் பயனுற்றனர்.

உ

# எதிர்காலம்

★


## ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்

ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.


( துந்துபி௵ சித்திரைமீ 1௳ முதல் 31௳ முடிய )

( 14—4—1982 முதல் 14—5—1982 முடிய )

| | | | |
|---|---|---|---|
| | சூ பு | | ரா |
| சு | இராசி | | |
| | | | |
| ல/ சந் கே | | கு | செ சனி |

| | | | |
|---|---|---|---|
| செ | ராகு சந் சூ | | பு |
| கு சு | அம்ஸம் | | |
| | | | ல/ சனி |
| | | கே | |

துன்மதி ௵ பங்குனி மீ 31 ௳ மங்களவாரம் மூல நக்ஷத்திரம் கரசைகரணம் கூடிய காலத்தில் கலியுகாப்தம் 5083 சௌரமான துந்துபி வருஷாரம்பம் ஆகிறது. கலியுக சுத்த தினம் 1865607 நாள் 43 நாழிகை 32 விஞடி. 30 தற்பறை. இதை 7 ஆல் வகுத்துவந்த மீதமாகிய தினம் சுக்கிராதியாய் எண்ண வருகிற வாரமாகிய மங்களவாரத்தில் தற்பறை நீங்கிய நாழிகை 43 விஞடி. 32 க்கு தனுர்லக்கினத்தில் ஸ்ரீ லோகரட்சகரான சூரிய பகவான் வானமண்டலத்தில் துந்துபி ஆண்டிற்கான நவ நாயகர்களை ஏற்படுத்திக் கொண்டு மீனராசியிலிருந்து மேஷராசி சங்கிரமணமாக துந்துபி வருஷம் சௌரமான சித்திரைமாதப்பிரவேசம் செய்தருளுகின்ருர். அன்று விஷு புண்ணிய காலமாகும். மறுதினம் புதவாரம் புத்தாண்டின் முதல் தேதியாகிறது. சங்கிரமணகால வாராதிபதி செவ்வாய்பகவான் துந்துபிவருஷத்தின் மந்திரியாக வருகின்ருர். சங்கிரமணகால கிரகஸ்திதியின்

பலனுவது உலகில் எல்லாவகை தானியங்களும் நிறைந் திருக்கும். உலகில் சிற்சில இடங்களில் கிராமங்கள் காடுகள் அக்கினியால் பாதிக்கப்படும். சர்வேஸ்ரன் அருளில் ஆன்ரோர் களால் நிவாரணம் நடைபெற்றுக் கொண்டிருக்கும். செம்மண் பூமியில் தானியங்கள் அதிகரித்துவரும். செழுமை பூமிகளில் முப்போகங்களில் விளைவு மிகுந்து நாட்டின் பொருளாதாரம் உயரும். கிழக்கு நாடுகளில் கடத்தல்காரர்கள், பண்டக்கலப் படம் செய்பவர்கள் நசிவர். நாடுகளில் ஆளுநர்கள் தர்ம பரிபாலனம் செய்து பிரஜைகளை இரட்சிப்பார்கள்.

உலகில் உள்ள திருமடங்கள் ஆசாரிய பீடங்களில் ஈஸ்வரன் கட்டளையில் அவதாரமாகிவந்து சிவ சமயம் பரிபாலிக் கின்ற பாக்கியத்தில் திருவீற்றிருக்கின்ற சிவஞான குருமகான்கள் லோகமாந்தர்களுக்குச் சிவாசார நியமவிதிமுறைகளைத் திருவாய் மலர்ந்து போதித்து அருள்வார்கள். தேசங்களில் எங்கும் தேவாலயங்களில் நித்தியம் ஆறுகால பூசைகள், சைத்ரோத்ஸவ வைபவங்கள் சிறப்பாக நடைபெறும். ஆலயங்களில் நிர்வாக உத்தமசீலர்களின் திடசித்த லோகோபகார அரும்பணி சாதனை யினுல் வேதகீதங்கள் தெய்வபிரீதி இன்னிசை வாத்தியங்கள் முழங்க பஞ்சமூர்த்திகளின் இரத வீதியுலாக்காட்சி சிறப்புடன் நடைபெறும். பக்தகோடிகள் இறைவனின் அலங்கார திரு உருவத்தோற்றத்தினைத்தரிசனம்செய்து பரமானந்தம் அடைவர்.

1. மேஷம் :- அசுவதி – பரணி. கார்த்திகை – ¼

( சு. சே. சோ. லா. - லி. லு. லே. லோ. – அ. )

மேஷராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். பணவரவு நல்ல விதத்தில் வந்து கொண்டிருக்கும். கட்டிட பிராப்தி வாகன பிராப்திகளில் நல்லன ஏற்பட்டு சௌகரியம் தரும். வித்தியா வியாபாராதி கலை துறைகளில் எழுத்துமூல விஷயங் களில் ஏப்ரல் 26வ முதல் விசேஷபலனை ஏற்படுத்தும். எல்லாக் காரியங்களையும் செம்மையாக நடத்தச் செய்யும். தாரபுத்திரர் களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். ஏப்ரல் 16, 17, 18, 19, 20, 23, 24, 25, 28, 29 மே 5, 6, 7, 8, 14 தேதிகளில் விசேஷ பலனுக நடக்கும். மே 9, 10 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

துந்துபி ஹு இராசி ஆதாயம் 2, விரயம் 8, ஆரோக்கியம் 6, அனுரோக்கியம் 4, இராஜபூஜிதம் 4, இராஜகோபம் 2, சுகம் 6, துக்கம் 3.

2. ரிஷபம் :- கார்த்திகை ¾ - உரோகிணி - மிருகசீர்ஷம் ½

( இ. ஊ. ஏ. - ஒ. வ. வி. வூ. - வே. வோ. )

ரிஷபராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்பாபி விருத்தியில் திரண்ட பண வருமானம் வரும். சுப காரியங்களில் செலவும் ஏற்படச் செய்யும். ஏப்ரல் 29 வுக்கு விடுவாகனங்களில் பிரயோஜன பலனை ஏற்படுத்தும். வித்தியா வியாபாராதி கலைத்துறைகளில் பிரசித்த நிலைமையாகும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்து வரும். ஏப்ரல் 19, 20, 21, 22, 26, 27, 29, 30 மே 1, 7, 8, 9, 10 தேதிகளில் தனுதாயாதி நற்பலன்களையளிக்கும். ஏப்ரல் 14, 15, மே 11, 12, 13 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திம பலன்தரும்.

துந்துபிஞு இராசி ஆதாயம் 11, விரயம் 14, ஆரோக்கியம் 3' அனுரோக்கியம் 1, இராஜபூஜிதம் 6, இராஜகோபம் 5, சுகம் 6. துக்கம் 3.

3. மிதுனம் :- மிருகசீர்ஷம் ½ - திருவாதிரை - புனர்பூசம் ¾

( கா. கி. - கு. க. ங. ச்சா. - கே. கோ. ஹ. )

மிதுனராசி 9 பாதங்களும் மிகுந்த நற்பலனையளிக்கும். குடும்பாபி விருத்தியில் பண வருமானம் கண்யத்திற்கு ஏற்ப வந்துகொண்டிருக்கும். சகோதரருக்கு சுபம் தரும். நவீன வாகனம் இயந்திர சாதனம் வாங்குதல் ஆகும். முயற்சிக்கின்ற காரியங்கள் வெற்றிகரமாக நடந்துவரும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். ஏப்ரல் 14, 15, 21, 22, 24, 28, 29 மே 2, 3, 9, 10, 11, 12, 13 தேதிகளில் தனுதாயாதி நற்பலன்களையளிக்கும். ஏப்ரல் 16, 17 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

துந்துபிஞு இராசி ஆதாயம் 14 விரயம் 11, ஆரோக்கியம் 5, அனுரோக்கியம் 2, இராஜபூஜிதம் 3, இராஜகோபம் 5, சுகம் 6, துக்கம் 3.

4. கடகம் :- புனர்பூசம் ¼ - பூசம் - ஆயில்யம்.

( ஹி. - ஹு. ஹே. ஹோ. ட. - டி. டு. டேடோ. )

கடகராசி 9 பாதங்களும் சுபபலனுக நடக்கும். பணவருமானம் மிகுந்துவரும். இராஜகண்யஸ்திதியில் எல்லாக்காரியங்களையும் நடத்தும். வித்துவத்துவம் கலைத்துறைகளில் அரசாங்க கௌரவம் அளிக்கும். தெய்வ தரிசனம் செய்தல், நல்வசனம் கேட்டல், ஓர் இடத்துக்கு அதிபதியாகுதல் ஆகும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். ஏப்ரல் 14, 15,

16, 17, 18, 23, 24, 25, 26, 27, 30 மே 1, 5, 6, 11, 12, 13, 14 தேதிகளில் ஜெயம் நுட்பபுத்தி, உயர்ந்த ஸ்தானம் ஏற்படுதல் ஆகிய நற்பலன்தரும். ஏப்ரல் 19, 20 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

துந்துபிஞு இராசி ஆதாயம் 14, விரயம் 2, ஆரோக்கியம் 2, அஞரோக்கியம் 6, இராஜபூஜிதம் 1, இராஜகோபம் 2, சுகம் 6, துக்கம் 3.

5. சிம்மம் :- மகம் – பூரம் – உத்திரம் ¼

(ம. மி. மு. மே. – மோ. ட. டி. டு. – டே.)

சிம்மராசி 9 பாதங்களும் மிச்சிரபலஞக நடக்கும். தனவருமானம் வரும். உடன் நல்லகாரியச் செலவை ஏற்படுத்தும். ஏப்ரல் 26உக்குமேல் புத்திதீட்சண்யமாகக்காரிய சாதனை ஆகும். உத்தியோகத்தில் உயர்வளிக்கும். ஒப்பந்தங்களில் வீடுவாகன பிராப்தியில் விசேஷபலனை ஏற்படுத்தும். தாரபுத்திரர்களுக்குச் சௌக்கியபலன் தரும். ஏப்ரல் 17, 18, 19, 20, 26, 27, 29, மே 2, 3, 7, 8, 14, தேதிகளில் தஞதாயம் பிரசித்தம் ஏற்படும். ஏப்ரல் 21, 22 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

துந்துபி ஞு இராசி ஆதாயம் 11, விரயம் 5, ஆரோக்கியம் 7, அஞரோக்கியம் 4, இராஜபூஜிதம் 4, இராஜகோபம் 2, சுகம் 6, துக்கம் 3.

6. கன்னி :- உத்திரம் ¾ – ஹஸ்தம் – சித்திரை ½

(டோ. ப. பி. – பு. ஷ. ண. ட. - பே. போ.)

கன்னியாராசி 9 பாதங்களும் மிச்சிரபலஞக நடக்கும் பணவருமானம் திருப்தியளிக்கும். இராசிக்கு இரத்த பித்த மயக்கம்வந்து உடன் குணமாகும். வித்தியா வியாபாராதிகளில் உத்தியோகத்தில் பிரசித்த நிலைமையை ஏற்படுத்தும். நல்லோர் பிரபலஸ்தர் சந்திப்பு, நல்ல விஷய உரையாடல் இவற்றில் சந்துஷ்டி நிலைமையாகும். எல்லாக் காரியங்களையும் வெற்றிகரமாக நடத்திவரும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். ஏப்ரல் 19, 20, 21, 22, 28, 29, 30 மே 1, 4, 5, 9, 10 தேதிகளில் விசேஷபலனை ஏற்படுத்தும். ஏப்ரல் 23, 24 தேதிகள் சந்திராஷ்டமம் மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

துந்துபிஞு இராசி ஆதாயம் 14, விரயம் 11, ஆரோக்கியம் 5, அஞரோக்கியம் 2, இராஜபூஜிதம் 3, இராஜகோபம் 5, சுகம் 6, துக்கம் 3.

7. துலாம் :- சித்திரை ½ - சுவாதி - விசாகம் ¾

( ர. ரி. - ரு. ரே. ரோ. தா. - தி. து. தே. )

துலாராசி 9 பாதங்களும் மிச்சிரபலனக நடக்கும். நிரந்தரமாக உள்ள பணவருமானம் வந்துகொண்டிருக்கும். அடிக்கடி அவசிய செலவினங்களும் ஏற்பட்டுக்கொண்டிருக்கும். சகோதரர் சுகம் நன்ருக இருந்துவரும். ஏப்ரல் 26 வ ஆனல் வித்தியா வியாபாராதிகளில் சௌக்கியம் நன்ருக இருந்து வரும். ஏப்ரல் 14, 15, 21, 22, 23, 24, 30 மே 1, 2, 3, 6, 7, 8, 11, 12, 13, தேதிகளில் தனதாயாதி நற்பலன்களையளிக்கும். ஏப்ரல் 25, 26, 27, தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்'

துந்துபி ஸு இராசி ஆதாயம் 11, விரயம் 14, ஆரோக்கியம் 3, அனரோக்கியம் 1, இராஜபுஜிதம் 6, இராஜகோபம் 5, சுகம் 6' துக்கம் 3.

8. விருச்சிகம் :- விசாகம் ¼ - அனுஷம் - கேட்டை.

( தோ. - ந. நி. நு. நே. - மதோ ய. யி. யு. )

விருச்சிகராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். நல்ல பணவருமானம் வரும். சகோதரர் விசுவாசம் அனுசரணை பலம் தரும். எல்லாக்காரியங்களும் வெற்றிகரமாக நடந்துவரும். வாகனசுகம் திருப்தியளிக்கும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். ஏப்ரல் 16, 17, 18, 23, 24, 25, 26, 27 மே 2, 3, 4, 5, 9, 10, 14 தேதிகளில் தனதாயாதி நற்பலன்களையளிக்கும். ஏப்ரல் 28, 29 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

துந்துபி ஸு இராசி ஆதாயம் 2, விரயம் 8, ஆரோக்கியம் 6, அனரோக்கியம் 4, இராஜபூஜிதம் 4, இராஜகோபம் 2, சுகம் 6, துக்கம் 3.

9. தனுசு :- மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

( யே. யோ பா. பி. - பு. த. ப, ட. - பே. )

தனுர்ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனக நடக்கும். குடும்பாபிவிருத்தியில் பணவருமானம் வரும். வெளுமை வஸ்துவின் பிராப்தி ஆபரணபிராப்தியையளிக்கும். வித்தியா வியாபாராதிகளில் லிகிதமூல விஷயங்களில் ஏப்ரல் 26 வ க்குமேல் விசேஷ பலனை ஏற்படுத்தும். பானுவாரத்தில் சூரியார்ச்சனை செய்தலால்

ஆயாசம் தீரும். ஏப்ரல் 14, 15, 19, 20, 26, 27, 28, 29 மே 4, 5, 6, 6, 7, 8, 11, 12 தேதிகளில் தனுதாயாதி நற்பலன்களை யளிக்கும். ஏப்ரல் 30 மே 1 இத்தேதிகளில் சந்திராஷ்டமம். மற்ற தேதி களில் மத்திமபலன் தரும்.

துந்துபிஞு' இராசி ஆதாயம் 5, விரயம் 14, ஆரோக்கியம் 4, அனுரோக்கியம் 5, இராஜபூஜிதம் 3, இராஜகோபம் 5, சுகம் 6, துக்கம் 3.

**10.** மகரம் :- உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½

( போ. ஜ. ஜி. - கி. கு. கே. கோ. - கா. கி. )

மகரராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். குடும்பாபிவிருத்தி யில் பணவருமானம் வரும். இரத்தினபூஷணம் தரும். வீடு வாகன பிராப்தியில் நவீனம் ஏற்படும். வித்தியா வியாபாராதி கலைத்துறைகளில் உயர்ந்தஸ்திதியாகும். எல்லாக்காரியங்களும் புனிதம் பொருந்தி நடைபெற்றுவரும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். ஏப்ரல் 16, 17, 18, 21, 22, 28, 29, 30 மே 1, 7, 8, 9, 10, 14 தேதிகளில் தனுதாயாதி நற்பலன் களையளிக்கும். மே 2, 3 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதி களில் மத்திமபலன் தரும்.

துந்துபி ஞு' இராசி ஆதாயம் 8, விரயம் 8, ஆரோக்கியம் 5, அனுரோக்கியம் 0, இராஜபூஜிதம் 0, இராஜகோபம் 5, சுகம் 6, துக்கம் 3.

**11.** கும்பம் :- அவிட்டம் ½ - சதயம் - பூரட்டாதி ¾

( கு. கே, - கோ. ஸ. ஸி. ஸு. - ஸே. ஸோ. தா. )

கும்பராசி 9 பாதங்களும் சுபமானபலனைத் தரும். பண வருமானம் வரும். இல்லத்தில் விசேஷவைபவம் நடக்கும். வீடு வாகன பிராப்தியில் நல்ல சௌகரியத்தை ஏற்படுத்திவரும். வித்தியா வியாபாராதி கலைத்துறைகளில் ஏப்ரல் 14, 15, 19, 20, 23, 24, 30 மே 1, 2, 3, 9, 10, 11, 12, 13 தேதிகளில் தனுதாயாதி நற்பலன்களையளிக்கும். மே 4, 5 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன்தரும்,

துந்துபி ஞு' இராசி ஆதாயம் 8, விரயம் 8, ஆரோக்கியம் 5, அனுரோக்கியம் 0, இராஜபூஜிதம் 0, இராஜகோபம் 5, சுகம் 6, துக்கம் 3.

12. மீனம்:- பூரட்டாதி ¼ - உத்திரட்டாதி - ரேவதி.

( தி. - து. ஸ. ச. த. - தே. தோ ச. சி. )

மீனராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். பணவருமானம் வரும். டாம்பீகத்தில் கௌரவச் செலவைச் செய்யும். ஒப்பந்தம் செய்து கொள்ளுதல், காரியங்களைக் கெடியாக நடத்துதல் ஆகும். விடுவாகனபிராப்தியில் மாறுதல் ஏற்படும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். ஏப்ரல் 14, 15, 16, 17, 18, 21, 22, 26, 27 மே 2, 3, 4, 5, 12, 13, 14 தேதிகளில் தனுதாயாதி நற்பலன்களையளிக்கும். மே 7, 8 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

துந்துபி ஞூ இராசி ஆதாயம் 5, விரயம் 14, ஆரோக்கியம் 4, அனுரோக்கியம் 5, இராஜபூஜிதம் 3, இராஜகோபம் 5, சுகம் 6, துக்கம் 3.

---

## பார்வையாளர் குறிப்பு

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

### சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம்

இந்நன்னுள் சீகாழி அருள்மிகு ஸ்ரீசட்டைநாதசுவாமி திருக்கோயிலை வழிபடும்பேறு உடையேன். திருக்கோயில் துப்புரவாக உள்ளது. வில்லிபாரதச்சொற்பொழிவுஇத்திருக்கோயிலில் ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணிமன்றத்தினரால் நிகழ்தல் அறிந்து மகிழ்ச்சி. பணிமன்றத்தினர் மேற்கொள்ளும் பணிகள் சிறக்க என் வாழ்த்து. பணி மன்றத்தினர் அமைக்கும் நிகழ்ச்சி நிரலில் **" ஞானசம்பந்தர் உயர்வும் வாழ்வும் "** மற்றும் அம்மறை ஞானமுனிவருடன் தொடர்புடைய பிற சான்றோர்களின் வாழ்வும் உயர்வும், வெளியிடுதல் வேண்டும். அவையே பணிமன்றத்துக்கும் ஏற்புடையதாகும் என்று எண்ணுகிறேன். இதுபற்றி என்னிடம் வினவிய பணிமன்ற அமைப்பு அன்பரிடமும் சொல்லியுள்ளேன். ஞானசம்பந்தர் வாக்கு வளர்க ! வெல்க !

(ஒ-ம்) **தேவ. நடராஜன்.**
நிதித்துறை ( வருவாய் )
அறநிலையங்கள் வருவாய் அதிகாரி
26—3—82 தமிழக அரசு தலைமைச் செயலகம், சென்னை.

தருமையாதீனத் திருமடத்தில்

## குருவழிபாடும் அருளுபதேசமும்

தருமையாதீனத் திருமடத்தில் ஒவ்வொரு ஆங்கில மாதத்திலும் முதல் ஞாயிற்றுக்கிழமையன்றும் காலை சரியாக 10-மணி அளவில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களை அன்பர்கள் வழிபட்டு அருளுபதேசம் பெறும் பிரார்த்தனை வழிபாட்டுக் கூட்டம் நிகழ்ந்துவருகிறது. முதல் பிரார்த்தனைக் கூட்டம் துன்மதி வருடம் வைகாசி மாதம் 23ஆம்நாள் வெள்ளிக்கிழமையன்று (5—6—81) நடைபெற்றது. இதுவரை 11 கூட்டங்கள் நிகழ்ந்துள்ளன. மாயூரத்தினின்றும் மாயூரம் சார்ந்த பகுதிகளினின்றும் அன்பர் பலர் வந்திருந்து வழிபட்டுப் பயன்பெறுகின்றனர். பிரார்த்தனைக்கூட்டத்தில் கூட்டுப் பிரார்த்தனையும், சமய உண்மைகளை உலகியலோடு பொருத்திக் காட்டித் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எளிமைப் படுத்தி விளக்கி அருளும் உபதேசங்களும், சமயத் தொடர்பான ஐயங்களை நீக்கும்வினுவிடை நிகழ்ச்சிகளும் பிறவும்நடைபெறுகின்றன. இம்மாதம் 11ம் வழிபாட்டுப் பிரார்த்தனைக் கூட்டம் 4-4-82 ஞாயிறன்று, காலை சரியாக 10 மணியளவில் தொடங்கி, நிகழ்வுற்றது. கூட்டுப்பிரார்த்தனையை அடுத்து தருமையாதீன வேதசிவாகமபாடசாலைத் தலைமையாசிரியர் ‘ஆகமம்’ பற்றி எடுத்துக்கூறினுர். தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் இறைவன் ஆன்மாக்களுக்குச் செய்யும் உபகாரம், இறைவன் குருவாக வந்து அருள்புரிதல் முதலியபல சித்தாந்தக் கருத்துக்களை விளக்கி ஆசியுரை அருளினுர்கள். ‘இதயம்’ ‘ஞானபூமி’ ஆசிரியர் திரு. மணியன் அவர்களும் மாயூரம் நகர அன்பர்களும் இக்கூட்ட்த்தில் கலந்துகொண்டனர்.

அடுத்த பிரார்த்தனைக் கூட்டம் 2—5—82 ஞாயிறன்று நிகழ இருக்கின்றது அன்பர்கள் கலந்துகொண்டு பயன் பெறுவார்களாக.

### சீகாழியில் அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம்

தருமையாதீனத்தின் அருளாட்சிக்கு உட்பட்ட 27 தேவஸ்தானங்களுள் ஒன்ருகச் சிறப்புற்றுத் திகழ்வது சீகாழி ஸ்ரீசட்டைநாதசுவாமி தேவஸ்தானம். ஸ்ரீ திருநிலைநாயகி உடனுகிய ஸ்ரீ பிரமபுரீசுவரர் எழுந்தருளி இருக்கும் இத்திருக்கோயிலின் தெற்குக் கோபுரவாயிலின், மேற்குப் புறத்தில் எழுந்தருளி அன்பர்களின் ஆபத்துக்களைக் காத்தருளுகின்ற ஸ்ரீ ஆபத்துக் காத்த விநாயகரின் விமானத்திற்கும் கிழக்குப் புறத்தில் எழுந்தருளி அடியார்களின் பகை நீக்கிக் காத்தருளுகின்ற ஸ்ரீ சத்ரு சம்ஹார

வேலவரின்விமானத்திற்கும் சீகாழிநகரப் பக்தர்களின்பேருதவி யால் திருப்பணி செய்வித்து, விமானங்கட்கும் மூர்த்திகட்கும் அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் பங்குனி 18 ஆம் நாள் ( 31—3—'82 ) புதன்கிழமை காலை 9 மணிக்குமேல் 10 – 30 மணிக்குள் தருமையாதீனம் இருபத்தாருவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் முன்னிலையில் வேதாகம முறைப்படி மிகச் சிறப்பாக நடைபெற்றது. தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் கும்பாபிஷேகத்திற்குப் பல்லாற்ருனும் பேருதவி புரிந்த சீகாழி வழக்கறிஞர் திரு. ஸ்ரீதர் அவர்களையும் கடைக் கண் விநாயக நல்லூர் எஸ்டேட் திரு. துரைராஜன் அவர்களையும் சீகாழி திரு. M. C. V. முத்துகணேஷ் அவர் களையும் பாராட்டிப் பட்டாடை போர்த்தி அருட்பிரசாதம் வழங்கி, குடமுழக்கின் பெருமை, திருக்கோயில் நலன், குடமுழுக்குச் செய்தருளினல் ஆகும் பயன் முதலியவற்றை மக்கள் மனம்கொள்ளும் வண்ணம் எளிமையாக விளக்கி ஆசியுரை அருளினர்கள். திரளான பக்தர்கள் கும்பாபிஷேக விழாவிற் கலந்து கொண்டு தரிசித்தும் ஆசியுரை கேட்டும் பயனடைந்தனர்.

## வெள்ளப்பள்ளம் அரிசனக் காலனியில் திருவிளக்கு வழிபாடு

சீகாழிக்குக் கிழக்கில் மூன்று கி. மீ. தொலைவிலுள்ளதும், தருமையாதீனத்திற்குச் சொந்தமானதுமாகிய வெள்ளப்பள்ளம் அரிசனக் காலனியில் அமைந்துள்ள கன்னியம்மன் கோயிலில் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் முன் னிலையில் திருவிளக்கு வழிபாடு 7—3—82ஞாயிறன்று மாலைமிகச் சிறப்பாக நிகழ்வுற்றது. 51 திருவிளக்குகள் வைத்து, மாயூரம் குமரக்கட்டளை திரு. சேதுக்குருக்கள் மந்திரம் சொல்லவும், சீகாழி, தேவஸ்தான ஓதுவார் திரு. எஸ். திருஞானசம்பந்தம் பூசைக்குரிய தமிழ் மறைகளை ஓதவும் அரிசன மகளிர் முறைப்படி திருவிளக்குப் பூஜை நிகழ்த்தினர். ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் காலனியில் வசிக்கும் மக்களுக்கு, அருட் பிரசாதம் வழங்கினர்கள். அரிசன மக்களின் முன்னேற்றத் திற்காகச் சமயம் காட்டும் வழிமுறைகளை அன்பர்கள் நன்ருகப் புரிந்து கொள்ளும் வண்ணம எளிமைப்படுத்தி விளக்கி ஆசியுரை அருளினர்கள். திரளான மக்கள் திருவிளக்கு வழிபாட்டில் கலந்து கொண்டும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அருளிய ஆசியுரை கேட்டும் பயனடைந்தனர்.

# சித்திரை மாதச் சிறப்பு நாட்கள்

14—4—82 புதன், தமிழ்வருடப்பிறப்பு வேளூர் ஸ்ரீ வைத்தியநாத சுவாமிக்குச் சீதளகும்பம் ஆரம்பம், சீகாழியில் உச்சிக் காலத்தில் ஸ்ரீ உமாமகேசருக்குப் புழுகாப்பு, திருக்கடவூர் ஸ்ரீகாலசம்காரமூர்த்திக்கு அபிஷேகம், விஷுபுண்யகாலம் புதுப் பஞ்சாங்கம் படித்தல்.

16—4—82 வெள்ளி, திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவா சுவாமிக்கும் திருக்குறுக்கை ஸ்ரீ யோகீசுவரசுவாமிக்கும் சம்வத்ஸரா

17—4—82 சனி, ஸ்ரீ நடராஜர் அபிஷேகம். [பிஷேகம் காளாஷ்டமி.

19—4—82 திங்கள், ஸ்ரீ அப்பர் சுவாமிகள் குருபூஜை, திருவாமூரில் ஸ்ரீ அப்பர் சுவாமிக்கு விசேஷ வழிபாடு, திருப்புகலூரில் ஸ்ரீ அப்பர் சுவாமிகள் மோக்ஷம்.

21—4—82 புதன், கருங்குயில்நாதன்பேட்டை ஸ்ரீ சக்திபுரீசுவர சுவாமிக்கு சம்வத்ஸராபிஷேகம், பிரதோஷம்.

22—4—82 வியாழன், மாதசிவராத்திரி.

23—4—82 வெள்ளி, சர்வ அமாவாசை,

25—4—82 ஞாயிறு, வேளூர்க்கிருத்திகை, தருமபுரம் ஸ்ரீதருமபுரீசுவரர் ஆலயத்தில் சண்முகருக்கு அபிஷேகம் கிருத்திகைவிரதம்.

26—4—82 திங்கள், காரைக்கால் தருமபுரம் ஸ்ரீ யாழ்முரிநாதசுவாமி சம்வத்ஸராபிஷேகம், அக்ஷயதிருதீயை.

27—4—82 செவ்வாய், திருக்கடவூர், சீகாழி, திருப்பனந்தாள், திருவையாறு முதலியதலங்களில் சைத்ரோத்சவ துவஜாரோகணம் சூரியனார்கோயில் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ ஆதிசிவாக்ரயோகிகள் குருபூஜை, இரவு விசேஷ வழிபாடு.

28—4—82 புதன், சீகாழியில் திருமுலைப்பால் உற்சவம், ஸ்ரீஉமாமகேசுவரர் புழுகாப்பு, சங்கரஜயந்தி.

1—5—82 சனி, ஆயில்ய விழா.

2—5—82 ஞாயிறு, திருக்கடவூர் ஸ்ரீ காலசம்காரமூர்த்தி அபிஷேகம். இரவு காலசம்காரக் காட்சி.

3—5—82 திங்கள், சித்திரைவிழாவில் திருக்கல்யாண விழா.

4—5—82 செவ்வாய், அக்னி நக்ஷத்திராரம்பம 16-49.

5—5—82 புதன், ஸ்ரீ உமாபதிசிவாசாரியார் குருபூஜை, பிரதோஷம், சித்திரைப்பெருவிழாவில் திருத்தேர்.

6—5—82 வியாழன், வேளூரில்மகாந்நியாசபூர்வக மண்டலாபிஷேக ஆரம்பம், கடவூர், சீகாழி, திருப்பனந்தாள், திருவையாறு முதலிய தலங்களில் சைத்ரோத்ஸவ தீர்த்தம் குத்தாலத்தில் பஞ்சமூர்த்திகள் காவிரியில் தீர்த்தம் கொடுத்தருளல்.

7—5—82 வெள்ளி, பௌர்ணமி விரதபூஜை, மாதபூஜையில் மருக்கொழுந்து சாத்துதல்.

8—5—82 சனி, திருவையாறு கும்பகோணம் சப்தஸ்தானம். தருமை 6 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ திருஞானசம்பந்த தேசிக சுவாமிகள் குருபூஜை.

9—5—82 ஞாயிறு, ஆச்சாள்புரம் ஸ்ரீ சிவலோகத்தியாகராஜசுவாமிக்கும் மணக்குடி ஸ்ரீ சுந்தரேசுவரசுவாமிக்கும் சம்வத்ஸராபிஷேகம்.

11—5—82 செவ்வாய், சங்கடகரசதுர்த்தி, கடவூர் ஸ்ரீ முனீசுவரபூஜை,

14—5—82 வெள்ளி, ரிஷபரவி 39-4, விஷ்ணுபதி புண்ணியகாலம் திருவையாறுமாதப்பிறப்புத்தீர்த்தம், தொண்டைமண்டலாதீனம் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் மடம் ஆதி குருமுதல்வர் குருபூஜை.

## மதிப்புரை

### உமாபதி சிவாசாரியார் திரட்டியருளிய

# தேவார அருள்முறைத் திரட்டு

உரைவிளக்கம் :- வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன் பி.லிட்., வெளியீடு:- அன்னபூர்ணு பதிப்பகம்-7, சன்னிதித்தெரு திருப்பனந்தாள் 512 504. பக்கங்கள் 150. விலை ரு. 7—00.

சமய உலகம் தேவாரத் திருமுறைகளை இலக்கியம் என்றும் மெய்கண்டசாத்திர நூல்களை இலக்கணம் என்றும் கூறும். சந்தானகுரவருள் நான்காம் ஆசாரியராகிய உமாபதிசிவம் தாம் அருளிய திருவருட்பயன் என்ற நூலின் கருத்துக்களை விளக்குதற்குத்திருவருட்பயனில் தேவாரத்திருமுறைகளிலிருந்து 99 பாடல்களைத்திரட்டி 10 தலைப்புக்களில் இலக்கியமாக வழங்கி யுள்ளார். அத்திரட்டு தேவார அருள்முறைத் திரட்டு என்ற பெயரோடு சமய உலகில் கொண்டாடப்பெற்றுவருகின்றது. கிடைத்தற்கு அருமையாயிருந்த இந்நூற்பதிப்பை அன்னபூர்ணு பதிப்பகத்தினர் உரை விளக்கத்தோடு வெளியிட்டுள்ளனர்.

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் இந் நூலுக்கு ஆசியுரை வழங்கியருளியுள்ளார்கள். தருமையாதீனம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்பள்ளியில் தமிழாசிரியராகப் பணி புரியும்வித்துவான்திரு. கா. ம. கண்ணப்பன் பி, லிட்., அவர்கள் இந்நூலில் வந்துள்ள தேவாரப்பாடல்களுக்குப் பதவுரையும் விளக்கமும் எழுதி எளிதில் நூலை அறிந்தின்புறுமாறு உதவி உள்ளார். தமிழ் முதுகலை இளங்கலை வகுப்புக்களில் சைவசமய தத்துவப்பாடங்களைப் பயில்வோர்க்கு இந்நூலைப் பாடமாக அமைத்துப் பயிலச்செய்யலாம். சைவசித்தாந்தத்திற்கு மூல இலக்கியம் தேவாரம் என்ற நெறியில் ஆய்வு செய்வோர்க்கு இந்நூல் பெரிதும் உதவும். பொதுவாகச் சமய அன்பர்கள் அனைவருமே படித்துப் பயன்பெறத்தக்கநூல். வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன் அவர்களின் உழைப்பும் மதிநுட்பமும் பாராட்டத்தக்கன.

இந்நூலைத் தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கட்குக் காணிக்கையாக்கித் தம் நன்றியைப் புலப்படுத்தி உள்ளார் திரு. கா. ம. கண்ணப்பன். இந்நூல் வெளிவர ஆக்கமும் ஊக்கமும் வழங்கிய பெங்களூர் அறநெறிக் கொடையாளர்திரு. ம. வே. ஜெயராமன் அவர்களின் தமிழ்ப்பற்றும் சமயப்பற்றும் பாராட்டுதற்குரியன.

— வி. சா. குருசாமி தேசிகர்.

Printed & Published by V. Ramaiah Pillai, Managar, Dharmapuram at tha Gnanasambandam Press Dharmapuram, Mayuram. 10-4-82